# தமிழன்

THAMILAN தமிலன்

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 272 பிலவ வருடம், ஆனி மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை (08.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 26, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## நக்கல் நமசிவாயம்





## சிறுமிமீது பாலியல் குற்றம்; கடற்படை வைத்தியர் பணிநீக்கம்

•நா.தினுஷா

கல்கிஸையில் 15 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் கைதான கடற்படையின் விசேட வைத்திய நிபுணரை பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுதல் அமுலாகும் வகையில் அவர் பணிநீக்கம் செய்யப்படுவதாக இலங்கை கடற்படை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 02»

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பிரிட்டன் தூதுவர் நேற்று சந்திப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினரை நேற்றுக் காலை சந்தித்த இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சரா ஹுல்ட்டன், தமிழர் பிரச்சினைகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார்.

பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், அதிகாரப்பகிர்வு, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் குறித்து இந்த சந்திப்பில் விரிவாக பேசப்பட்டதாக கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் விடுத்துள்ள ட்விட்டர் பதிவொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசிலிருந்து வெளியேறுகிறதா சுதந்திரக் கட்சி?

## கோட்டா - மைத்ரி 15ஆம் திகதி முக்கிய சந்திப்பு

•நமது விசேட செய்தியாளர்

அரசாங்கத்தில் பிரதான பங்காளியாக இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாரபட்சம் காட்டப்படுவதால் அரசுக்குள் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா என்பது குறித்து ஆராய்ந்துவரும் அக்கட்சி, தேவைப்படின் அமைச்சுப் பொறுப்புகளை துறக்கவும் தயாராகியுள்ளதாக நம்பகரமாக அறியமுடிந்தது.

அமைச்சுப் பொறுப்புகள் கடந்த காலங்களில் பகிரப்பட்ட விதம், தேசியப்பட்டியல் உறுப்புரிமை ஒதுக்கப்பட்ட முறைமை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கடுமையாக விமர்சித்திருந்தார். அதேபோல் நேற்றுமுன்தினம் கூடிய கட்சியின் உயர்மட்ட அரசியல்பீடமும் தற்போதைய அரசியல் நிலைவரங்களை ஆராய்ந்திருந்தது.

ஆளுங்கட்சியின் முக்கியஸ்தர்களால் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதால் இறுதியான அரசியல் தீர்மானமொன்றை எடுக்க முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துப் பேசுவதென இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது. கட்சி எதிர்நோக்கும் பிரச்சினைகளை அன்றையதினம் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறுவதென இந்தச் சந்திப்பில் மேலும் இறுதிசெய்யப்பட்டது.

## மைத்ரிபால சிறிசேனவுடன் அமெ. தூதுவர் சந்திப்பு

### சுதந்திரக் கட்சியின் அரசியல்பீடமும் அவசரமாக கூடியது



•நமது விசேட செய்தியாளர்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்ளிட்ஸ், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்து பேசியிருப்பது கொழும்பு அரசியலில்... 02»

## கப்பல் நட்டஈடு

### ரூ. 720 மில். திறைசேரிக்கு!

•ம. சசிதரன்

கொழும்புத் துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடாக அந்நிறுவனத்தினால் இதுவரை 720 மில்லியன் ரூபா திறைசேரியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த தொகையானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த கப்பலினால் பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு இதில் பெருமளவான தொகையை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நீதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவின் ஊடாக மேற்படி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொவிட் புதிய திரிபு 'லம்டா' இலங்கையில் பரவும் சாத்தியம்



•யோ.தர்மராஜ்

உலக நாடுகளில் புதிதாக உருவாகியுள்ள 'லம்டா' திரிபு இலங்கையிலும் பரவும் சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

அவ்வாறு பரவும் பட்சத்தில் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தி, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதோடு, ஒட்சிசன் தேவைப்பாடுகளை ஏற்படுத்தி அதிக மரணங்களையும் ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளும் காணப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர்... 02»

## இந்தியாவை சீண்டினால் நிலைமை பாரதூரமாகும்

### அரசை விமர்சித்து சிறீதரன் எம்.பி. சபையில் காரசார பேச்சு

•ம.சுசிகலா

வடக்கின் தீவகப்பகுதிகளை நோக்கி சீன நிறுவனங்களும் பாகிஸ்தானிய கம்பனிகளும் அகலக்கால் வைப்பது மிகவும் ஆபத்தானது. இது தமிழர்களுக்கு எதிரான செயல் மட்டுமல்ல, இந்தியாவை சீண்டுகின்ற செயலாகும். இவை பாரதூரமான விளைவுகளை தரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று தெரிவித்தார்.

எங்களுடைய இருப்புகளை கேள்விக்குறியாக்கி இம்மண்ணிலே வாழ்பவர்களின் இருப்பை இல்லாமலாக்கவே அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார். 02»

## ஹெய்ட்டி ஜனாதிபதி படுகொலை



ஹெய்ட்டியின் ஜனாதிபதி ஜோவெனல் மோய்ஸ் (வயது - 53) அவருடைய இல்லத்தில் வைத்து அடையாளந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டின் இடைக்கால பிரதமர் க்ளோட் ஜோசப் நேற்று அறிவித்துள்ளார்.

போர்ட் ஓ பிரின்ஸில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அந்நாட்டு நேரப்படி நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். 02»

## தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய ஐவர் கைது



02»

## பெசிலை எம்.பி.யாக பெயரிட்டு விசேட வர்த்தமானி வெளியீடு

### சுபநேரத்தில் இன்று பதவிப்பிரமாணம்

•நா.தினுஷா

பெசில் ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினராக பெயரிட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட... 02»

## விஸா இன்றி தங்கியிருப்போருக்கு 500 டொலர் தண்டப்பணம் விதிப்பு

விஸா இன்றி நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களிடம் தங்கியிருக்கும் காலத்துக்கான விஸா கட்டணத்துக்கு மேலதிகமாக 500 அமெரிக்க டொலரை அறவிடுவது உள்ளிட்ட விஸா வழங்கும் நடைமுறைகளை மறுசீரமைக்கும் குடிவருவோர் குடியகல்வோர் ஒழுங்குவிதிகளை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்க பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய குடிவருவோர்... 02»






இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாத் கடாக் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று நேற்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.



அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட பைசர் தடுப்பூசிகளின் ஒருதொகை மாளிகாவத்தை, பீ.டீ.சிறிசேன மைதானத்தில் இராணுவத்தினரால் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால்

## மத்திய அமைச்சரவை மாற்றியமைப்பு

இந்தியப் பிரதமர் மோடி, மத்திய அமைச்சரவையை விரிவாக்கம் செய்தார். 7 பெண்கள் மற்றும் 8 மருத்துவர் உள்ளிட்ட 43 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர். அவர்களுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். புதிதாக பதவி ஏற்றுக்கொண்டவர்களில் பலர் 50 வயதிற்கு கீழ் உள்ளவர்கள். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படும் என கடந்த சில நாட்களாக பேசப்பட்டு வந்தது. இது தொடர்பாக பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ.க. தலைவர் நட்டா மற்றும் மூத்த அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தி வந்தார்.

இந்நிலையில், மத்திய அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டது. 43 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர். அதில், 36 பேர் புதுமுகங்கள். 7 பேர் ஏற்கனவே அமைச்சரவையில் இருந்தவர்கள்.

அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் அவர்களுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகனும் அமைச்சராக பொறுப்பேற்றார்.

# தாதியரின் போராட்டத்தை ஒத்திவைக்க தீர்மானம்

தாதியர்களின் வேண்டுகோளுக்கிணங்க சுகாதார அமைச்சினால் கடந்த 5ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரம் அனுமதி பெறாமையினால் அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் இன்று பணிபுறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்திருந்த நிலையில், அதனை ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்க அந்தச் சங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த அமைச்சரவைப்பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்பினால் அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்துக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் பணிப்புறக்கணிப்பை கைவிட தீர்மானித்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

தாதியர்களை 5 வருடங்களில் 2 நிலைக்கு தரமுயர்த்துவது தொடர்பிலும் 12 வருடங்களில் முதலாம் நிலைக்கு தரமுயர்த்துவது தொடர்பிலும் அரச சேவை ஆணைக்குழுவிடம் கலந்துரையாடியதன் பின்னர் நடவடிக்கை எடுப்பது தொடர்பிலான அனுமதி சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், இன்னும் சில கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்த கோரிக்கைகளுக்காகவும் எதிர்காலத்தில் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளது. எது எவ்வாறாக இருந்தாலும் இன்று முன்னெடுக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது - என்றார்.

## விஸா இன்றி...

குடியகல்வோர் ஒழுங்குவிதிகளுக்காக 2019 ஜூன் 03ஆம் திகதிய 2126/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை ஜூலை 08ஆம் திகதி அனுமதிக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் கூடிய இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிரான் அலஸ் மற்றும் மேஜர் பிரதீப் உந்துகொட ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன், அரசாங்க அதிகாரிகள் ஒன்லைன் முறையின்கீழ் கலந்துகொண்டனர்.

சுற்றுலா விஸா கட்டணத்தை அறவிடும்போது தற்பொழுது கடைப்பிடிக்கப்படும் குழப்பமான முறைக்குப் பதிலாக ஒரே கட்டண முறையை அறிமுகப்படுத்துவது, சுற்றுலா விஸாவுக்காக வழங்கப்படும் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து 09 மாதங்களாக மாற்றுவது உள்ளிட்டவை இதன்மூலம் மேற்கொள்ளப்படும் என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் யூ.வீ.சரத் ரூபசிங்ஹ தெரிவித்தார்.

அத்துடன், தற்பொழுது இலங்கைப் பெறுமதியில் அறவிடப்படும் விஸா கட்டணம் அமெரிக்க டொலரில் அறவிடப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனைவிட, 2018ஆம் ஆண்டுக்கான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதி அறிக்கை என்பனவும் இங்கு ஆராயப்பட்டு அனுமதிக்கப்பட்டன.

## ஹெய்ட்டி ஜனாதிபதி...

இந்தச் சம்பவத்தில் அவரது பாரியார் கடும் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டுமுதல் ஆட்சியில் இருந்த மோய்ஸை பதவி விலகுமாறு கோரி இவ்வாண்டு ஆரம்பம்முதல் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தீவிர ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே ஜோவெனல் மோய்ஸ் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவரது இல்லத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் ஸ்பானிய மொழி பேசியதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, தலைநகர் போர்ட் ஓ பிரின்ஸ் உள்ளிட்ட பிரதான நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் புதிய திரிபு...

வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.

உலக நாடுகளில் வேகமாக பரவிவரும் ‘லம்டா’ திரிபு இலங்கையில் பரவும் ஆபத்து இருக்கின்றதா என்பது குறித்து வினவியபோதே அவர் இதனை ‘தமிழன்’ நாளிதழுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றின் தீவிரத்தில் சிக்கியுள்ள பல நாடுகள் அதிலிருந்து மீள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்ற நிலையில், நாளுக்கு நாள் பல்வேறு திரிபுகள் உருவாகி, அதன் ஊடாக அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதில் அதிக எண்ணிக்கையிலான மரணங்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், தற்போது மேலும் புது புது திரிபுகள் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. கொரோனாவின் தீவிர பரவல், இரசாயனவியல் தாக்கம் என்பவற்றினாலேயே புது புது திரிபுகள் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. இந்தத் திரிபுகளினால் இதன் சுபாவம் மாறுபடுகின்றது. இதனால், இந்தத் திரிபு ஏற்படும் நோயாளர்களின் அறிகுறிகளில் மாறுபாடுகள் ஏற்படும். இதனால் மரணங்களின் எண்ணிக்கை அசாதாரணமான முறையில் அதிகரிக்கக்கூடும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

கொரோனா தொற்றின் தீவிரத்தால் அல்பா, பீட்டா, டெல்ட்டா மற்றும் டெல்ட்டா ப்ளஸ் என்பன அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், தென்னாபிரிக்க நாடுகளில் தற்போது லம்டா திரிபுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தத் திரிபானது டெல்ட்டாவின் திரிபாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், லம்டா திரிபு இலங்கையிலும் பரவும் சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன. அவ்வாறு பரவும் பட்சத்தில் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தி, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதோடு, ஒட்சிசன் தேவைப்பாடுகளை ஏற்படுத்தி அதிக மரணங்களையும் ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இவற்றை கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் உரிய முறையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதோடு, சுகாதார விதிமுறைகளை இறுக்கமான முறையில் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதே, புதிய திரிபுகளிடமிருந்து இலங்கை பாதுகாக்க முடியும் - என்றார்.

## சிறுமிமீது பாலியல்...

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உளுகேதென்னவினால் குறித்த வைத்தியர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையினரால் உள்ளக விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்கிசையில் 15 வயது சிறுமி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த விவகாரம் தொடர்பில் பலர் ஏற்கனவே கைதாகியுள்ளதுடன், பண்டாரகம பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்ட இலங்கை கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் கொமாண்டரான இருதய நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் எதிர்வரும் 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தடையை மீறி...

நா. தினுஷா

கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடைவிதிக்கப்படுவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட குற்றச்சாட்டில் முன்னிலை சோஷலிசக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட ஐந்து பேரும் மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விசேட தனிமைப்படுத்தல் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. விசேடமாக கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதினூடாக கொரோனா தொற்று பரவலடையும் என அறிவித்திருந்தார். அதற்கமைய கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

நேற்று கொழும்பு, ராமநாயக்க பிரதேசத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு எதிரான செயற்படாமைக்காக ஐவர் ராமநாயக்க பிரதேசத்தில் கொம்பனித்தெரு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில், முன்னிலை சோசலிசக் கட்சியின் துமிந்த நாகமுவவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

போகாகும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொரலந்த நகரில் கடந்த முதலாம் திகதி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸாரினால் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. குறித்த விசாரணைகளுக்கமைய சந்தேகநபர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு வெளிமடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இதனுடன் தொடர்புடைய மேலும் சில சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த விசாரணைகளுக்கமைய நேற்று (07) மேலும் 5 சந்தேகநபர்கள் பொலிஸிநிலையத்துக்கு வந்து ஆஜராகியுள்ளனர். அதன் பின்னர் அவர்கள் ஐவரும் போகாகும்புர பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் நாமல் கருணாரத்ன மற்றும் மக்கள் விடுதலை முன்னணியில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன என்போரும் கைதாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, குறித்த ஐவரும் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவு மீறுதல் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான மஹிந்த ஜயசிங்க ஜா – எல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், நேற்று துமிந்த நாகமுவ உள்ளிட்ட ஐவர் பிணையில் விடுவிக்கப்பட்டடிருந்த சிலையில், அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## பெசிலை எம்.பி.யாக...

தனது பதவியை இராஜினாமா செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பெசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்புரிமையை பெறுவதற்கான ஆவணங்களில் நேற்று பெசில் கையெழுத்திட்டுள்ளார். இன்று நாடாளுமன்றத்தில் சுபநேரத்தில் எம்.பி.யாக பதவிப்பிரமாணம் செய்யும் பெசில் இன்று மாலை அமைச்சராக பதவியேற்பார் என்று அறியமுடிந்தது.

அதேசமயம் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கமுன்னர் அமைச்சர் பதவியை பொறுப்பேற்கவும் நேற்று ஏற்பாடுகள் நடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மைத்ரிபால...

பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் இதர முக்கிய விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் பேசப்பட்டுள்ளது .

இந்த சந்திப்பு நடந்த கையோடு தனது இல்லத்தில் கட்சியின் அரசியல் குழுவை கூட்டி அவசர ஆலோசனைகளை நடத்தியுள்ளார் மைத்ரிபால சிறிசேன.

பெசில் ராஜபக்ஷ அமைச்சராக வந்து எதிர்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதை மைத்ரி தரப்பு விரும்பவில்லை. மறுபுறம் மைத்ரியும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதால் அரசியலில் முக்கிய தீர்மானங்களை எடுக்க தயாராகி வருகிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. இவை தொடர்பில் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களுடன் நீண்டநேரம் ஆராய்ந்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்க மைத்ரிபால சிறிசேன போட்டியிட உத்தேசித்துள்ள நிலைமையில், இப்போதைய அவரின் அரசியல் காய்நகர்த்தல்கள் கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

## இந்தியாவை...

நாடாளுமன்றத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழாக ஒழுங்குவிதிகள் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்க அதிபரோ, பிரதேச செயலாளரின் அனுமதியோ இல்லாமல் சீன நாட்டுப் பிரஜைக்கு இலங்கையிலே கௌதாரிமுனை பகுதியிலே கடலட்டைப் பண்ணை வைப்பதற்கு யார் அனுமதி வழங்கியது? குறிப்பாக பள்ளிக்குடா, வலைப்பாடு, கௌதாரிமுனை, கல்முனை, பாசையூர் மற்றும் குருநகர் பகுதிகளைச் சேர்ந்த எங்களது மீனவர்கள் தொழில் புரியும் இடத்தில் அட்டைப் பண்ணை வைப்பதற்கு யார் அனுமதி வழங்கியது? எந்த வகையில் இந்த அனுமதி வழங்கப்பட்டது? சீனாவின் கம்பனியான குயிலன் பிரைவேட் லிமிடெட் என்ற கம்பனி பெயரில் நாட்டு பிரஜை அல்லாத ஒருவர் எவ்வாறு ஒரு நாட்டுக்குள் ஒரு கம்பனியை நடத்தும் அனுமதி வழங்கப்பட்டது? இது தொடர்பில் யாழ்ப்பாண அரச அதிபருக்கு தெரியாது, கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு தெரியாது, அப்பகுதியின் பிரதேச செயலாளர்களுக்கு தெரியாது. இந்த அடிப்படையிலே சீனாவுக்கு இந்த நிலம் மறைமுகமாக விற்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இங்கு வாழ்கின்ற மக்கள் தெருக்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். யுத்தம் முடிவடைந்து தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல் தாங்கள் சிதைந்துபோயுள்ள நிலையில், அவர்கள் பரம்பரையாக இறால் தொழில் செய்துவந்த இடம் இப்போது சீன நாட்டுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதுபோலவே நெடுந்தீவை அண்டியிருக்கிற கடல்பகுதிகளிலே 40 ஏக்கர் என்ற அடிப்படையில் இரண்டு இடங்களை இந்த அரசாங்கம் ஒரு சீனக் கம்பனிக்கு வழங்க முனைந்திருப்பதாக தகவல்கள் தெரியவந்துள்ளன. இதைவிட ஒல்லாந்தர் காலத்திலே கட்டப்பட்ட யாழ்ப்பாண கச்சேரியின் பழைய வளாகம் சீன நிறுவனமொன்றுக்கு ஹோட்டல் ஒன்றை அமைப்பதற்காக வழங்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாக தெரியவருகின்றது. இதனை பகிரங்கமாகவே கேட்கிறோம். பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் இதற்கு பதிலளியுங்கள்.

அண்மையிலே அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு திரும்பிய பின்னர் இந்த கச்சேரிக்கு முன்னால் உள்ள காணி அவ்வாறு ஒரு சீன நிறுவனத்துக்கு வழங்க ஏற்பாடு நடைபெற்றதாக நாம் அறிகிறோம்.

அதுபோலவே சாதாரணமாக ஒரு தனிநபருக்கு ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர்தான் அட்டைப் பண்ணைக்கு என்று வழங்குவர்.

ஆனால், நெடுந்தீவிலே 40 ஏக்கர்படி இரண்டு துண்டுகளை (80 ஏக்கர் நிலங்கள்) கம்பனிகளுக்கு வழங்குவதென்றால் அந்த கம்பனிகள் யாருடையவை, யாருக்குச் சொந்தமானவை? ஆகவே, சட்டம் என்பது இந்த நாட்டிலே யாருக்குரியது? இந்த நாட்டில் இருக்கின்ற வடமாகாண கடல்வாழ் உயிரின வளர்ப்பின் பணிப்பாளர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார். அரசாங்க அதிபர் தெரியாது என்கிறார். அதுபோல பிரதேச செயலாளர் தெரியாதென்கிறார். அப்படியென்றால் யாரைக் கேட்டு இந்த அனுமதிகள் வழங்கப்படுகிறது?

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்கின்ற அரியாலை பிரதேசத்தில் ஏழு இலட்சம் அட்டைக்குஞ்சுகளை வளர்க்கக்கூடிய 899.99 சதுர மீட்டர் பகுதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இதற்கு விநாயகர் மீனவர் சங்கம் என்று ஒரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த சங்கம் எங்கே இருக்கிறது? யார் அந்த சங்கத்துக்கு அதிகாரிகள்? யார் அதிலே நிறைவேற்றுக்குழுவிலே இருக்கிறார்கள் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது. இவ்வாறு கள்ளத்தனமாக நபர்களை வைத்துக்கொண்டு வேறு நாடுகளுக்கு இந்த நிலங்களும், கடல்களும் விற்கப்பட்டுக்கொண்டிருப்பது மிகவும் அபாயகரமானது.

நாங்கள் கிளிநொச்சி மாவட்ட மீனவர்கள் மட்டுமல்ல. யாழ்ப்பான மீனவர்களும் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் பாகிஸ்தானிய தூதுவர் யாழ்ப்பாணம் வருகை தந்ததுடன், யாழ்ப்பாண செயலகத்திலே ஒரு கூட்டத்தை நடத்துகிறார். அவர் தங்கியது மண்டைதீவிலே. அதுமட்டுமன்றி அவர் அல்லபிட்டி கரையோரங்களைச் சென்று பார்வையிட்டிருக்கிறார்.

அப்பகுதியில் ஏற்கனவே ஒரு பாகிஸ்தானிய நிறுவனம் ஹோட்டல் கட்டுவதற்கு முயற்சித்தது. அது எங்களால் தடுக்கப்பட்டது. இப்போது மறுபடியும் அந்த இடத்தை பாகிஸ்தானிய நிறுவனம் அடைய முயற்சிக்கிறதா? அதற்காகத்தான் பாகிஸ்தானிய தூதுவர் அங்கு வந்தாரா? என்று எமக்கு சந்தேகம் எழுகின்றது. அதனை அரசாங்கம் எமக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவிலே மீள்புதுப்பிக்கத்தக்க சக்திகொண்ட சூரிய மின்உற்பத்தி, காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்திசெய்கின்ற திட்டங்கள் ஏற்கனவே சீன நிறுவனங்களுக்கு வழங்கியிருந்தன. இவை அனைத்தும் முழுக்க முழுக்க இந்தியாவை சீண்டுகின்ற விடயம். இது தமிழர்களுக்கு எதிரான செயல் மட்டுமல்ல, இந்தியாவை சீண்டுகின்ற செயலாகும். இவை அனைத்தும் பாரதூரமான விளைவுகளை எமக்கு தரும். எனவே, பொறுப்புவாய்ந்தவர்கள் இதனை கவனத்தில் எடுக்கவேண்டும்.

எங்களுடைய இருப்புகளை கேள்விக்குறியாக்கி இம்மண்ணிலே வாழ்பவர்களின் இருப்பை இல்லாமலாக்கவே அரசாங்கம் முயற்சிக்கிறது. வடக்கின் தீவகப்பகுதிகளை நோக்கி சீன நிறுவனங்களும் பாகிஸ்தானிய கம்பனிகளும் அகலக்கால் வைப்பது மிகவும் ஆபத்தானதும் இந்த நாடு சுதந்திரம் இழக்கின்ற ஒரு நிலையையும் தோற்றுவிக்கிறது - என்றார்.

இந்திய செய்திகள்

# ஓரினத் திருமணம் செய்தவருக்கு இந்திய குடியுரிமை கிடைக்குமா?

## இந்திய மத்திய அரசிடம் புதுடில்லி உயர் நீதிமன்றம் கேள்வி




இந்திய குடியுரிமை பெற்றவர் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர் இடையேயான ஓரினத் திருமணம் செல்லுபடியாகுமா; அவருக்கு இந்திய குடியுரிமை வழங்க முடியுமா என பதிலளிக்கும்படி இந்திய மத்திய அரசுக்கு புதுடில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**அங்கீகரிப்பு**

ஓரினத் திருமணத்துக்கு இந்திய சட்டங்கள் இதுவரை அங்கீகாரம் அளிக்கவில்லை. இந்திய சட்டங்களின்படி, தங்கள் திருமணத்தை அங்கீகரிக்க கோரி ஓரினச் சேர்க்கையாளர்கள் டில்லி உயர் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க்கில் பணியாற்றும் ஓ.சி.ஐ. எனப்படும் வெளிநாட்டுவாழ் இந்தியர் அந்தஸ்து பெற்றுள்ள ஜாய்தீப் சென்குப்தா, அமெரிக்காவைச் சேர்ந்த ரசல் பிளைன் ஸ்ரீபன்ஸ் ஓரினத் திருமணம் செய்துள்ளனர்.

தற்போது ஸ்ரீபன்ஸ்க்கு ஓ.சி.ஐ. அந்தஸ்து அளிக்கக் கோரி டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக பழகிவந்த சென்குப்தா மற்றும் ஸ்ரீபன்ஸ் ஓரினத் திருமணம் செய்துள்ளனர். அந்தத் திருமணத்தை அமெரிக்க சட்டம் அங்கீகரித்துள்ளது. தற்போது தங்கள் முதல் குழந்தை பிறப்பதற்காக இவர்கள் காத்திருக்கின்றனர்.

**நோட்டீஸ்**

வெளிநாட்டவர் திருமண சட்டத்தின்படி, இந்தத் திருமணத்தை இந்திய சட்டம் ஏற்கவேண்டும். விண்ணப்பதாரரின் பாலினம், பாலின உறவு பேதமில்லாமல் இந்தத் திருமணத்தை ஏற்கவேண்டும். இதை தனி மனித உரிமையாக அறிவிக்க வேண்டும்.

- இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பதிலளிக்கும்படி மத்திய அரசு மற்றும் நியூயோர்க்கிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கேரளாவில் பரவும் ஹெர்ப்பீஸ் வைரஸால் யானைகள் மரணம்



கேரள மாநிலம், திருவனந்தபுரம் மாவட்டம், கோட்டூர் அருகே காப்புகாடு பகுதியில் யானைகள் முகாம் உள்ளது.

வனப்பகுதிகளில் பிடிக்கப்படும் யானைகள், தாயை இழந்து தவிக்கும் குட்டி யானைகள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது, குட்டிகள் உட்பட 50இற்கும் மேற்பட்ட யானைகள் இங்கு உள்ளன.

இந்நிலையில், இந்த முகாமிலுள்ள யானைகளை ஹெர்ப்பீஸ் என்ற வைரஸ் தாக்கி வருவது சமீபத்தில் கண்டறியப்பட்டது. கடந்த வாரம் ஒன்றரை வயதான குட்டி என்ற பெண் யானை குட்டி வைரஸ் தாக்கி இறந்தது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 3 யானை குட்டிகளுக்கு ஹெர்ப்பீஸ் வைரஸ் பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது.

அந்த யானை குட்டிகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், நேற்றுக் காலை வைரஸ் பாதிப்புக்கு சிகிச்சை பெற்றுவந்த 6 வயதான அர்ஜூன் என்ற குட்டியானை இறந்தது. அடுத்தடுத்து வைரஸ் தாக்கி 2 குட்டியானைகள் இறந்ததால் முகாமிலுள்ள அனைத்து யானைகளையும் மருத்துவர்கள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# ஏழு பேர் விடுதலையில் தி.மு.க. கபட நாடகம்

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலைவழக்கில் தண்டனைபெற்று, சிறையிலுள்ள ஏழு பேரின் விடுதலையில் தி.மு.க. கபட நாடகம் ஆடுகிறது - என, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் உதயகுமார் குற்றஞ்சாட்டினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

ராஜீவ் கொலைக் குற்றவாளிகளான ஏழு பேர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளனர். தமிழர் என்ற ரீதியில் அவர்களை விடுவிக்க வேண்டுமென ஒட்டுமொத்த தமிழகமும் எதிர்பார்க்கிறது.அதனால் தான், அவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் தீர்மானம் இயற்றி முயற்சி மேற்கொண்டார்.

சட்டச்சிக்கல்கள் இருந்ததால் உடனடியாக முடியவில்லை. இ.பி.எஸ்., முதல்வரானதும், மீண்டும் அவர்களை விடுதலைசெய்ய முயற்சிகள் ஆரம்பமாகின. சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி, அது கவர்னர், ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. உச்ச நீதிமன்றம், கவர்னரே இந்த விடயத்தில் முடிவெடுக்கலாம் என தெளிவாக கூறிவிட்டது. இருந்தாலும் கவர்னர், இதை மீண்டும் ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

கவர்னரிடம் இது தொடர்பான கோப்புகள் இருந்தபோது, கவர்னருக்கு அரசு தரப்பில் அழுத்தம் கொடுத்து, ஒப்புதல் பெற்று, ஏழு பேரையும் விடுதலைசெய்ய வேண்டும் என்று கூறிய தி.மு.க., இதற்காக அப்போதைய அ.தி.மு.க. அரசை கடுமையாக விமர்சித்தது. அதேபோல், தேர்தல் நேரத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் ஏழு பேரையும் உடனடியாக விடுதலைசெய்வோம் என வாக்குறுதி அளித்தனர்.

தமிழகத்தின் கெட்ட நேரம், தி.மு.க. ஆட்சிக்கு வந்துவிட்டது. மக்களும் பொய் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்துவிட்டனர். சரி, எப்படியாவது ஏழு பேரை விடுதலை செய்யட்டும் எனக் காத்திருந்தோம். ஆட்சிக்கு வந்து இரண்டு மாதமாகியும், ஏழு பேர் விடுதலைக்கு துரும்பை கூட கிள்ளிப்போடவில்லை.

ஆட்சிக்கு வந்ததும், தமிழகத்தில் நீட் தேர்வை இல்லாமல் செய்வோம் என முழங்கிவிட்டு, குழு போட்டு நாடகமாடுவதோடு, இந்தாண்டு நடக்கவுள்ள நீட் தேர்வுக்கு மாணவர்கள் தயாராக வேண்டும் எனக் கூறுகின்றனர்.

தி.மு.க., கபட நாடகம் ஆடுகிறது. நீட் விவகாரத்தில் வெளிப்படுவது போலவே ஏழு பேர் விடுதலையிலும் இரட்டை வேடம் போடுகிறது. ஏழு பேர் விடுதலை விவகாரத்தில் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என சட்ட அமைச்சர் ரகுபதி கூறியிருக்கிறார். ஆனால், கோப்புகள் கவர்னரிடம் இருந்தபோது மட்டும், அவருக்கு நெருக்கடி, அழுத்தம் கொடுக்க வேண்டும் என அ.தி.மு.க.வுக்கு அறிவுரை கூறினர்.

இப்படிதான் மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது. இரட்டை வேடம் போடுவதை விட்டுவிட்டு, மக்களுக்கு இனியாவது நல்லது செய்யவேண்டும். அதுதான் வாக்கு போட்ட மக்களுக்கு தி.மு.க. அரசு செய்யும் உபகாரமாக இருக்கும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# பொலிவுட் நடிகர் திலீப் குமார் உடல்நலக்குறைவால் காலமானார்



உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்றுவந்த பழம்பெரும் பொலிவுட் நடிகர் திலீப் குமார் நேற்று காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 98.

பிரபல பொலிவுட் நடிகர் திலீப் குமாருக்கு வயது முதிர்வு காரணமாக அவ்வப்போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு வந்தது. கடந்த ஜூன் 30ஆம் திகதி அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் மும்பையிலுள்ள இந்துஜா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரின் வயதைக் கருத்திற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த நடிகர் திலீப் குமார் நேற்று காலமானார். அவரது மறைவுக்கு திரை பிரபலங்கள், ரசிகர்கள் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மகத்தான நடிகர்களில் ஒருவரான திலீப் குமார், இந்திய திரையுலகின் மிக உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதை 1994ஆம் ஆண்டில் வென்றார். மத்திய அரசின் பத்ம பூஷன், பத்ம விபூஷன் பட்டங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறந்த நடிகருக்கான பிலிம்பேர் விருதுகளை அதிகமுறை வென்றுள்ளார். 1944ஆம் ஆண்டில் நடிகராக அறிமுகமாகி, 50 ஆண்டுகளில் 65 படங்களில் நடித்துள்ளார். 1998இல் வெளிவந்த கிலா என்ற படம்தான் இவரின் கடைசி படமாகும்.

நடிகர் திலீப் குமார் மறைவுக்கு இந்திய ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் பாதிக்கப்படவில்லை. மாறாக, அவை வலுப்படுத்தப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். காணாமல்போனவர்கள் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்கத்திற்காக அலுவலகம் ஆகியவற்றின் பணிகள் தொடர்கின்றன எனவும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனவர்கள் அலுவலகத்தின் முன்னைய தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளதால் புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ள நீதியமைச்சர், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை குறித்து பொதுமக்களை தவறாக வழிநடத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதுபற்றி நாடாளுமன்றத்தில் விரிவாக பிரஸ்தாபித்துள்ளார். நீதி விசாரணைக்கு உட்படுத்தல் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிரான சட்டவிதிகள் ஆகிய திருத்தங்கள் நாட்டில் மேற்கொள்ளப்படுவது வரவேற்கக்கூடியதே. இவை முன்னோக்கி அடியெடுத்துவைக்கும் நடவடிக்கைகள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவை சொற்களில் மட்டும் வைத்துக்கொண்டிருக்காது, இவற்றை நடைமுறைப் படுத்துவதே மிகவும் முக்கியமானது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தின் விளைவாக காணமல்போனோரை கண்டறிவதற்கான பணியகமும், இழப்பீடுகள் வழங்குவதற்கான பணியகமும் அமைக்கப்பட்டன.

இத்தீர்மானமானது முன்னைய அரசாங்கத்தின் உடன்பாட்டுடனேயே கொண்டுவரப்பட்டது. பிரதான பிரச்சினைகளை திசைதிருப்பி, முக்கியத்துவமில்லாத உதிரியான விடயங்களை சொல்லளவில் மேற்கொள்ளுவதன்மூலம் இவ்விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது என்பதனைக் காட்டுவதற்காகவே இவற்றை முன்னைய அரசாங்கம் செய்தது. அவற்றில் ஒன்றுதான் இந்த காணாமல்போனோரை கண்டுபிடிப்பதற்கான பணியகம்.

இதுவிடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும், ஐ.நா. கட்டமைப்பிலும் ஒரு செயன்முறை இருக்கிறது. அதாவது, எவ்விதமான முடிவுகள் எடுக்கப்படினும் அவை பாதிக் கப்பட்டவர்களை மையப்படுத்தியாகவே இருக்கவேண்டும். பாதிக் கப்பட்டவர்கள்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 08ஆம் திகதி, வியாழக்கிழமை

# குற்றம்புரிந்தவர்களுக்கு தண்டனை விலக்கா?

இச்செயன்முறையில் நம்பிக்கைகொண்டிருக்க வேண்டும். ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் இச்செயன்முறையில் நம்பிக்கைகொள்ளாவிடின் அவர்கள் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. பாதிக்கப்பட்டவர்களால் பல பரிந்துரைகள் முன்னைய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டன. ஆனால், இப்பணியகத்தினை அமைக்கும்போது அவை எவற்றையும் முன்னைய அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இப்பணியகத்தின் நம்பகத்தன்மை பற்றித் திரும்பத்திரும்ப முறையிட்டுவந்தனர்.

இப்பணியகம் உருவாக்குவது தொடர்பான சட்டப்பிரிவு 13இல் உபபிரிவு -2இல் குறிபிடப்பட்டபடி இப்பணியகத்தினால் விசாரணைகளில் கண்டறியப்படுகிற எந்த விடயமும், சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளில் பயன்படுத்தப்பட மாட்டாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இப்பணியகமானது நீதியை நிலைநாட்டும் என எவ்வாறு எதிர்பார்க்கலாம்?

இப்பணியத்தின் ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டவர் விடயத்தில் வெளிப்படைத்தன்மை கடைப்பிடிக்கப்படவில்லை. இதில் அங்கத்துவம் வகிக்கும் சிங்கள அரசியல்வாதிகள் சிலர், பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த எந்த ஒருவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதனை அனுமதிக்க மாட்டோம் என திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்கள். நியமிக்கப்பட்ட ஏழு ஆணையாளர்களில் முன்னாள் மூத்த படையதிகாரியும் உள்ளடக்கப்பட்டிருக்கிறார். அவரிடம் சென்று எவ்வாறு நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்?


வடக்கு, கிழக்கில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இப்பணியகத்திலோ அல்லது இழப்பீடுகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட பணியகத்திலோ நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவர்கள் இவற்றை புறக்கணித்து வருகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையினர் இப்பணியகத்திற்கு சென்று விசாரணைகளில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர். இத்தகைய பின்னணியிலேயே முன்னைய அரசாங்கம் இப்பணியகத்தை நாடாளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ள வைத்து உருவாக்கியது. பொறுப்புக்கூறல் விடயத்தில் சிறிதளவு முன்னேற்றமாவது ஏற்பட்டிருக்கிறது என்று சர்வதேச சமூகத்திற்கு காட்டுவதற்கு வெறுமனே சோடனைகளை செய்வதாக மட்டுமே அது உருவாக்கப்பட்டது. ஆதலால் இவற்றைக்காட்டி பொறுப்புக்கூறல் விடயத்தினை எவ்வித முன்னேற்றமுமின்றி ஆறு வருடங்களாக முன்னைய அரசாங்கத்தால் இழுத்துச்செல்ல முடிந்தது. இந்த அரசாங்கமும் மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தின் பிரகாரம் உருவாகக்கப்பட்ட மேற்படி இரண்டு பணியகங்களையும் வைத்திருக்க முனைவது ஆச்சரியத்துக்குரிய விடயமல்லை.

போர் முடிவடைந்து பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னரும் சாதாரண மக்களுக்கு எதிராக இராணுவத்தினரால் பாரிய குற்றச்செயல்கள் இழைக்கப்பட்டன என்பதனை புரிந்துகொள்ள முடியாதிருப்பது மிகவும் துன்பகரமான நிலைமை. தனது மக்களைப் பாதுகாக்கவேண்டியது ஒரு நாட்டின் கடமை. இராணுவத்தினர் இவ்வாறான குற்றச்செயல்களைச் செய்திருந்தால் அவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிப்பவர்கள், பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான குற்றச்செயல் நடைபெற்றதை தெரிந்திருந்து வைத்துக்கொண்டும் நடவடிக்கையெடுக்க மறுத்துவருவது இந்த நாடு எவ்வாறான துன்பகரமான நிலையிலிருக்கிறது என்பதனை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருப்பதுபோல் இவ்விதமான கலாசாரம் தொடருமானால் குற்றம் புரிபவர்கள் தண்டனை விலக்குப் பெறுகிற ஒரு நிலையே உருவாகும்.

# கலப்பு - இணைத் தடுப்பூசிகள் கொரோனாவுக்கு முடிவுகட்டுமா?



இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவும் கொரோனாவின் மூன்றாம் அலையை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றன. அதற்கான முன்னெடுப்பாக தற்போது மூன்றாம் அலை வேகமெடுத்திருக்கும் பிரிட்டனையும் ரஷ்யாவையும் அவை கூர்ந்து கவனிக்கின்றன. இந்தியாவைபோல் தடுப்பூசித் தட்டுப்பாட்டால் தடுமாறும் ரஷ்யா, மூன்றாம் அலையில் அதிகளவில் உயிரிழப்புகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. அதேநேரத்தில், குழந்தைகள் உட்பட பெரும்பாலானோருக்குத் தடுப்பூசி செலுத்தியுள்ள பிரிட்டன், மூன்றாம் அலையில் பெருமளவில் உயிரிழப்புகளைத் தடுத்திருக்கிறது. இந்த இரண்டு நாடுகள் உலகுக்குக் காட்டியுள்ள உண்மை 'கொரோனாவுக்கு எதிரான பேராயுதம் தடுப்பூசி' என்பதுதான்.

'2021 இறுதிக்குள் உலகில் 70% பேருக்குத் தடுப்பூசி செலுத்திவிட்டால், சமூக எதிர்ப்பாற்றல் கிடைத்துவிடும்; அப்போது கொரோனாவும் விடை கொடுத்துவிடும்' என்பது அறிவியலாளர்களின் எதிர்பார்ப்பு. ஆனால், வளர்ந்த நாடுகள் பலவும் தடுப்பூசிகளைப் பதுக்கிக்கொண்டதும், பன்னிரண்டுக்கும் மேற்பட்ட ஏழை நாடுகளுக்கு ஒரு தவணை தடுப்பூசிகூட இன்னும் கிடைக்கவில்லை என்பதும், இந்தியா உட்பட அநேக நாடுகளில் தடுப்பூசிக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதும், தடுப்பூசி செயல்திட்டத்தின் வெற்றிக்குத் தடைபோடுகின்றன. உதாரணமாக, இந்தியாவில் இதுவரை 4.6% பேர்தான் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர்.

## தடுப்பூசியில் தாமதம்

நாடளவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, தடுப்பூசி செலுத்துவதில் தாமதம் ஏற்படுமானால், இப்போது வீரியத்துடன் பரவிவரும் டெல்ட்டா - டெல்ட்டா பிளஸ் வேற்றுருவங்கள் இன்னும் நிறையவே உருமாறிவிடும். அப்போது தற்போதுள்ள தடுப்பூசிகள் அவற்றுக்குச் செயற்படாமல் போகும். அடுத்தடுத்த அலைகள் வரும். மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப நீண்டகாலமாகும். இப்படியான அச்சுறுத்தல்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

இந்தச் சூழலில் தற்போதுள்ள தடுப்பூசி செயல்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியதும் வேகப்படுத்த வேண்டியதும் மக்கள்தொகை அதிகமுள்ள உலக நாடுகள் முன்நிற்கும் ஆகப் பெரிய சவால்கள். இந்தச் சவால்களை எதிர்கொள்ள, முதலில் தற்போது நடைமுறையிலுள்ள தடுப்பூசிகளின் உற்பத்தியைப் பல மடங்கு அதிகரித்துத் தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அடுத்தது, சமூகத்தின் தேவையைச் சரியாகக் கணித்துத் தடுப்பூசி விநியோகத்தை முறைப்படுத்த வேண்டும். இந்த இரண்டில் முதலாவதுதான் மிகவும் கடினமானது. காரணம், ஒவ்வொரு தடுப்பூசியும் வெவ்வேறு தொழில்நுட்பத்தில் உருவாகியிருப்பதால், உடனடியாக அவற்றின் உற்பத்தியை உலகத் தேவைக்குப் பெருக்க முடியவில்லை. மேலும், முதல் தவணை செலுத்தப்பட்ட தடுப்பூசிதான் இரண்டாம் தவணையிலும் செலுத்தப்பட வேண்டும் என்ற விதிமுறையும் தடுப்பூசித் தட்டுப்பாட்டுக்கு வழிவகுக்கிறது. ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசி நீங்கலாக மற்றவை எல்லாமே இரண்டு அல்லது மூன்று தவணை செலுத்தப்படும் தடுப்பூசிகள். இந்த நிறுவனங்களின் உற்பத்தி அளவு போதுமானதாக இல்லை. சரியான தவணைக் கால இடைவெளியை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், அவற்றின் விநியோகம் சமநிலையில் இல்லை. இந்தப் பிரச்சினை இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவிலும் இருக்கிறது.

## நவீன வழிமுறை

பெருகிவரும் தடுப்பூசித் தேவையைச் சீரமைக்கும் வகையில் நவீன வழிமுறைகளை அறிமுகப்படுத்த அமெரிக்கா, பிரிட்டன், கனடா, சீனா, சுவீடன், நோர்வே, பின்லாந்து, ஜேர்மனி, தென்கொரியா ஆகிய நாடுகள், புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வெற்றிகண்டுள்ளன. அவை பின்பற்றிய அறிவியல் பின்னணி இதுதான். ஒரு பயனாளிக்கு இரண்டு தவணைகளிலும் ஒரேவகை தடுப்பூசியைச் செலுத்துவதற்குப் பதிலாக முதல் தவணை முதன்மைத் தடுப்புக்கும் இரண்டாம் அல்லது மூன்றாம் தவணை ஊக்கத் தடுப்புக்கும் வெவ்வேறு வகைத் தடுப்பூசிகளைச் செலுத்துவது (Heterologous prime – boost regimens). இப்படிச் செலுத்தப்படும் தடுப்பூசிகளுக்குக் 'கலப்பு - இணைத் தடுப்பூசிகள்' (Mix-and-match vaccines) என்று பெயர்.

பிரிட்டனில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய 'கொம்-கொவ்' (COM-COV study) ஆய்வில் முதல் தவணையாக ஆஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியைச் (இந்தியாவில் கொவிஷீல்ட்) செலுத்திக்கொண்ட 800 தன்னார்வலர்களுக்கு இரண்டாம் தவணையில் பைசரின் எம்ஆர்என்ஏ தடுப்பூசி செலுத்தப்பட்டது. ஆஸ்ட்ராஜெனேகா அல்லது பைசர் தடுப்பூசியை இரண்டு தவணைகள் செலுத்திக்கொண்டவர்களோடு ஒப்பிடும்போது, இவர்களுடைய இரத்தத்தில் கொரோனாவை மட்டுப்படுத்தும் தடுப்பணுக்கள் பலமடங்கு அதிகரித்ததோடு, நினைவாற்றல் 'டி' செல்களும் அதிகரித்திருந்தன. இந்த இரண்டு அதிகரிப்புகளும் கொரோனாவிலிருந்து பயனாளிகளுக்கு நீண்டகாலம் பாதுகாப்பு கொடுக்கும் என்பது ஏற்கனவே அறியப்பட்ட உண்மை. இந்தக் களப்பதிவுகளை அமெரிக்காவிலும் ஸ்பெயினிலும் நடந்த ஆராய்ச்சிகளும் உறுதிசெய்துள்ளன.

இது ஒரு நவீன முறைமைதான் என்றாலும், புதிய முறைமையில்லை. ஏற்கனவே எபோலா நோய்க்குத் தடுப்பூசி செலுத்தும்போது, இந்த முறைமைதான் பயன்படுத்தப்பட்டது. தவிரவும், தற்போது குழந்தைகளுக்கு வழங்கப்படும் 'பென்டாவேலன்ட்' - 'மோனோவேலன்ட்' ரோட்டா வைரஸ் தடுப்புமருந்துகளை உருவாக்கும் கிருமிகளும் வெவ்வேறானவையே. இவற்றின் பயன்பாட்டிலும் இதுவரை தவறேதும் இல்லை. ஆகவே, கொரோனாவுக்காக 'கலப்பு - இணைத் தடுப்பூசிக'ளைப் பயன்படுத்தினாலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

மேலும், ஜேர்மனியின் தலைவராக பதவிவகிக்கும் ஏஞ்சலா மெர்கெல் (Angela Merkel) முதல் தவணையில் ஆஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியையும் இரண்டாம் தவணையில் மொடர்னா தடுப்பூசியையும் செலுத்திக்கொண்டு, வரலாறு படைத்த பெண் அரசியலரானார். இதைத் தொடர்ந்து, 30இற்கும் மேற்பட்ட உலக நாடுகள், துணிச்சலுடன் 'கலப்பு - இணைத் தடுப்பூசி'களை ஏற்றுக்கொண்டன. இனி, இந்தியாவும் இந்த முறைமையைப் பின்பற்றக்கூடும்.

## முக்கியத்துவம் என்ன?

'கலப்பு - இணைத் தடுப்பூசி'களின் பயன்பாட்டை தடுப்பூசித் தட்டுப்பாட்டைத் தகர்க்க உதவும் புதிய ஆயுதம் எனலாம். காரணம், கொரோனாவுக்கு எவரும் எந்தத் தடுப்பூசியையும் செலுத்திக்கொள்ளலாம் எனும் எளிய வழியை இது கொடுத்திருக்கிறது. ஒரு தடுப்பூசி கிடைக்காதபோது அதற்காகக் காத்திருக்காமல், கிடைக்கும் எந்தவொரு தடுப்பூசியையும் பயன்படுத்திக்கொள்ளலாம். பயனாளிகள் தங்கள் வசதிக்கேற்றபடி குறைந்த விலை தடுப்பூசிகளையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். அயல்நாட்டுப் பயணிகள் அந்தந்த நாடுகளில் கிடைக்கும் தடுப்பூசி வகைகளைப் போட்டுக்கொள்ளலாம் என்பதால், 'தடுப்பூசி பாஸ்போர்ட்' பெறுவதும் எளிதாகிவிடும்.

தடுப்பூசிக்குத் தவமிருக்கும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு ஒரு நம்பிக்கை வெளிச்சமாக இது தோன்றுகிறது. இதைப் பயன்படுத்தி, விரைவிலேயே பெரும்பாலானோர் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முடியும். அப்போது கொரோனா பெருந்தொற்றுக்கு முடிவுகட்டவும் முடியும்.

**கு.கணேசன்,**
**பொதுநல மருத்துவர்.**
**நன்றி - ஹிந்து**

# நலம் தரும் அதிர்வு வைத்தியம்!


உடல், உள்ளம் இரண்டையும் பராமரிக்க வேண்டும் என்ற உணர்வு, பெருந்தொற்று காலத்தில் மேலோங்கியுள்ளது. இதற்கு ஈடுகொடுக்க தொழில்நுட்பத்தின் துணையோடு சவுண்ட் பெட் போன்ற படுக்கைகள் வந்துள்ளன.ஒரே நேரத்தில் உடல் மற்றும் உள்ளத்தை ஓய்வு நிலைக்கு கொண்டு செல்ல, நவீன தொழில்நுட்பத்தை இத்தகைய படுக்கைகள் பயன்படுத்துகின்றன.

சவுண்ட் பெட் படுக்கை துாக்கத்திற்கு அல்ல. ஒருவர் அதன் மீது படுத்தவுடன், மிக மெல்லிய அதிர்வுகளை தரும். உடலின் வெவ்வேறு பாகத்திற்கு, வெவ்வேறு அலைவரிசையில் அதிர்வுகளை ஏற்படுத்தும் வசதி இப்படுக்கையில் உள்ளது. இந்த மெல்லிய அதிர்வுகளால், படுத்திருப்பவரின் தசைகளும், நரம்புகளும் நல்ல ஓய்வு நிலைக்கு செல்லும். அது மட்டுமல்ல, காதில் மாட்டியிருக்கும் ஒலிக்கருவி மூலம், படுக்கையின் அதிர்வுகளுக்கு ஏற்ப இனியஓசைகள் வரும். இந்த நிலையில் மன இறுக்கங்கள் தளர்ந்து, படுத்திருப்பவரின் மனம் உள்நோக்கிய தியான நிலைக்கு செல்லும்.

ஒலி சிகிச்சை என்ற புதிய துறையின் வல்லுனர்கள் ஓபஸ் படுக்கையை வடிவமைக்க உதவி உள்ளனர். சில நிமிடங்கள் உடலுக்கு நல்ல ஓய்வு கிடைப்பது, மனம் விரைவில் ஒருமித்த நிலைக்கு செல்வது போன்றவற்றால் ஓபஸ் போன்ற படுக்கை தொழில்நுட்பங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என ஓபசின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.




# முடிவுறாத போர்...



# வெளியேறும் அமெரிக்கா முன்னேறும் தலிபான்கள்

# என்னவாகும் ஆப்கானிஸ்தான்?

**எந்தக் காரணத்தைச் சொல்லி ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா படையெடுத்ததோ, இன்று அதே காரணம் மீண்டும் வலுப்பெற அடித்தளம் அமைத்துக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறது.**



'தீவிரவாதத்துக்கு எதிரான போர்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டு கடந்த 20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் நடத்திவந்த போர், தன் கடைசி அத்தியாயத்தில் இருக்கிறது. இதை வெளிப்படுத்தும்விதமாக, ஜூலை 2ஆம் திகதி அதிகாலையில் ஆப்கனின் பக்ராம் விமானப்படைத் தளத்திலிருந்து, அமெரிக்காவின் கடைசி இராணுவ விமானம் வெளியேறியிருக்கிறது. இனி, ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பை அந்த நாட்டின் தலைவர்களும் இராணுவமும்தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற முற்றுப்புள்ளி விழுந்திருப்பதால், ஆப்கனை கபளீகரம்செய்யத் துடிக்கும் தலிபான்கள் கொண்டாட்டத்தின் உச்சத்திலிருக்கிறார்கள். அமெரிக்காவின் இந்த வெளியேற்றத்தால் தெற்காசிய அரசியல் தகிக்க ஆரம்பித்திருக்கிறது.

**முடிவுறாத 20 வருடப் போர்**

செப்டெம்பர் 11, 2001இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரக் கட்டடங்கள் தீவிரவாதத் தாக்குதலுக்குள்ளாகி தரைமட்டமாக்கப்பட்டன. சுமார் 3,000 பேரை பலிவாங்கிய இந்தக் கோரத் தாக்குதல், உலகத்தின் போக்கையே மாற்றியமைத்தது.

தாக்குதலை நடத்திய அல்கொய்தா தீவிரவாத இயக்கமும், அவர்களோடு தொடர்பிலிருந்தவர்களும் உலகம் முழுவதும் வேட்டையாடப்பட்டனர். அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் பின்லேடன், அய்மன் அல்-ஜவாஹிரிக்கு அடைக்கலம் அளிப்பதாக ஆப்கனை அப்போது ஆட்சிசெய்த தலிபான்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. பின்லேடனை பிடிப்பதற்கும் அல்கொய்தாவை ஒழிப்பதற்கும் 'தீவிரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பெயரில் ஆப்கானிஸ்தானில் போரைத் தொடங்கியது அமெரிக்கா. பாமியான் குன்றுகளிலிருந்த புத்தர் சிலைகளை வெடிவைத்து தகர்ப்பது, பெண்களைக் கொத்தடிமைகள்போல் நடத்துவது, 'இஸ்லாமிக் எமிரேட் ஒவ் ஆப்கானிஸ்தான்' என்ற பெயரில் தாங்கள் நடத்தும் ஆட்சியை எதிர்த்து பேசுபவர்களைச் சுட்டுக்கொல்வது எனத் தலிபான்கள் கொட்டமடித்த நேரமது என்பதால், நேட்டோ கூட்டமைப்பு உட்பட பல உலக நாடுகளும் அமெரிக்காவின் போரில் கைகோர்த்தன.

ஆண்டுகள் செல்லச் செல்லத்தான் புதைகுழியில் வந்து சிக்கிக்கொண்டதை அமெரிக்காவும், அதன் நட்புநாடுகளும் உணர்ந்தன. ஆப்கனின் அரசியல் வித்தியாசமானது. அந்த நாட்டின் இராணுவத்தையும் தாண்டி, நாட்டிலுள்ள ஒவ்வோர் இனக்குழுவுக்கும் பிரத்தியேகப் போர் வீரர்களும், இராணுவத் தலைவர்களும் இருப்பார்கள். இவர்களில் யார் நண்பர்கள், யார் எதிரிகள் என்பதை அமெரிக்கா புரிந்துகொள்வதற்குள் இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. நட்பாக உள்ள இனக்குழுத் தலைவர்களை ஒருங்கிணைத்து, ஆப்கானிஸ்தானின் அரசியலுக்குள் அவர்களை ஐக்கியப்படுத்தும் வேலையை அமெரிக்கா முயன்றும், அது சரியாகப் பலனளிக்கவில்லை. தலிபான்களின் தாக்குதல் ஒருபக்கம் இருந்தாலும், இனக்குழுக்களுக்கு இடையேயான ஈகோ சண்டையால் அமெரிக்கப் படைகள் திண்டாடின. நிலையான அமைதியை அமெரிக்காவால் ஆப்கனில் ஒருபோதும் நிலைநாட்டவே முடியவில்லை.

**அமெரிக்காவின் பிரௌன்**

பல்கலைக்கழகம் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்டிருக்கும் ஆய்வுகளின்படி, கடந்த 20 வருடங்களில் ஆப்கானிஸ்தானில் மட்டும் சுமார் 1,74,000 பேர் போரால் உயிரிழந்திருக்கிறார்கள். இவர்களில் சுமார் 2,300 அமெரிக்க இராணுவ வீரர்களும் அடக்கம். ஆப்கன் போருக்காக மட்டும் சுமார் 2 இலட்சம் கோடி அமெரிக்க டொலரை அமெரிக்கா அழித்திருக்கிறது. இவ்வளவு பணம் செலவாகியும், உயிரிழப்புகள் ஏற்பட்டும், போரில் அமெரிக்கா வெற்றிபெறவில்லை என்பதே நிதர்சனம். ஜூன் 30ஆம் திகதி நிலைவரப்படி, ஆப்கானிஸ்தானிலுள்ள 407 மாவட்டங்களில் 142 மாவட்டங்களை தலிபான்கள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றனர். ''எதிர்வரும் செப்டெம்பர் 11ஆம் திகதிக்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் முழுவதுமாக வெளியேறிவிடும்'' என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த ஏப்ரலில் அறிவித்த பிறகு, 69 மாவட்டங்களை அசுர வேகத்தில் தலிபான்கள் பிடித்துள்ளனர். இந்த வேகம்தான் உலக நாடுகளை கவலைகொள்ளச் செய்திருக்கிறது.

**தங்கப்பிறை அபின் சாம்ராஜ்ஜியம்**

உலகின் மொத்த அபின் உற்பத்தியில் 80% ஆப்கனிலிருந்து செல்வதால், அதில் கிடைக்கும் வருவாயை உள்நாட்டுப் போருக்குப் பயன்படுத்திக்கொள்கிறது தலிபான். பாகிஸ்தான், ஈரான் வழியாக மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இந்த அபின் கடத்தல் சாம்ராச்சியம் 'தங்கப்பிறை' என்றழைக்கப்படுகிறது. பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., ஈரான் இராணுவ அதிகாரிகள் எனப் பலருக்கும் இந்தக் கடத்தல் லாபத்தில் பங்கு செல்வதால், இந்தப் பிறையைக் கடைசிவரை அமெரிக்காவால் உடைக்க முடியவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிக்கொண்டிருக்கும் நிலையில், இந்த அபின் சாம்ராச்சியம் மேலும் விரிவடையும் என்கிறது ஐ.நாவின் பாதுகாப்பு சபை அறிக்கை. ஐ.நாவுக்கான போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தடுப்பு அலுவலகத்தின் இயக்குநர் காடா வாலி, ''2020ஆம் ஆண்டு மட்டும் ஆப்கானிஸ்தானில் 37% அபின் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. ஆப்கானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அபினின் வர்த்தகம் மட்டும் 11% அளவுக்கு உயர்ந்திருப்பதை எச்சரிக்கையாக நாம் பார்க்க வேண்டும்'' என்றிருக்கிறார்.

சமீபத்தில் தன்னை வொஷிங்டனில் சந்தித்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி முகமது அஸ்ரப் கானியிடம், ஆப்கனின் பாதுகாப்புக்குத் தன்னாலான எல்லா ஒத்துழைப்புகளையும் தருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாக்குறுதி அளித்திருக்கிறார். 'இனி ஆப்கனின் பாதுகாப்பை அந்த நாடே பார்த்துக்கொள்ள வேண்டும்' என்பதுதான் இதில் மறைந்திருக்கும் பொருள். பைடனின் இந்த முடிவுக்கு சி.ஐ.ஏ. முன்னாள் இயக்குநர் டேவிட் பெட்ரேயஸ், ஆப்கனுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் ரியான் க்ரோச்சர் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

''போரை நாம் முடிவுக்குக் கொண்டுவரவில்லை. களத்தை நம் எதிரிகளிடம் விட்டுக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறோம்'' என்று க்ரோச்சர் கொதித்திருக்கிறார். அமெரிக்கப் படைகள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்கிற ஆப்கனிலிருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதி ஸ்கொட் மில்லர் செய்தியாளர்களிடம் பேசும்போது, ''தலிபான்கள் முன்னேறும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஆறு மாதங்களில் ஆப்கன் தலைநகர் அவர்கள் வசம் சென்றுவிடும்'' - என்றார். இராணுவத் தலைமைகளின் எச்சரிக்கையையும் மீறி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இப்படியொரு முடிவை எடுத்ததற்கு தேர்தல் வாக்குறுதியும், போரால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலும்தான் காரணம் என்கிறார்கள்.

**குஷியில் பாகிஸ்தான்...**

இந்தக் களேபரங்களில் குஷியாகியிருப்பது பாகிஸ்தான்தான். ஆப்கானிஸ்தானின் பொருளாதாரக் கட்டமைப்பு வளர்ச்சிக்குப் பல நூறு கோடி ரூபாவை இந்தியா தந்திருக்கிறது. ஆப்கனின் நாடாளுமன்றக் கட்டடம், சல்மா அணைக்கட்டு ஆகியவற்றை இந்தியா இலவசமாகக் கட்டிக்கொடுத்திருக்கிறது. ஆப்கானிஸ்தானை நட்பின் அடிப்படையில் தன் வசமாக்கிக்கொண்டால், இராணுவ ரீதியாக ஒருபக்கம் சீனாவையும், மறுபக்கம் பாகிஸ்தானையும் எளிதாகச் சமாளிக்க முடியும் என்பது இந்தியாவின் கணக்கு. தவிர, துருக்மெனிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு எரிவாயு எடுத்துவர 'டபி பைப்லைன் திட்டம்' 2015இல் தொடங்கப்பட்டது. பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் பைப்லைன் பதிக்கும் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. இந்தச் சூழலில், தலிபான்களின் அதிகாரம் ஆப்கனில் ஓங்குவது இந்தியாவுக்குப் பிரச்சினைதான். தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தரப்பில் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், பாகிஸ்தானின் அழுத்தம் காரணமாக இந்திய சமாதான அழைப்பை தாலிபன்கள் ஏற்கவில்லை எனக் கூறப்படுகிறது.

ஜூன் 24ஆம் திகதி, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம்வகிக்கும் நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, ஆப்கானிஸ்தானிலுள்ள இந்திய சொத்துகளுக்கும் இந்தியர்களுக்கும், பாகிஸ்தான் தொடர்ந்து அச்சுறுத்தல் தருவதை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் எடுத்துக் கூறியிருக்கிறார்.

தோஹா நாட்டில் நாடு கடந்த அரசாங்கம் அமைத்திருக்கும் தலிபான்களுடன் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் தொடர்ச்சியாக மறைமுகப் பேச்சுவார்த்தை நடத்துவதும் இந்தக் கூட்டத்தில் பேசப்பட்டிருக்கிறது. 'தலிபான்களுடன் கரம் கோர்த்துக்கொண்டு ஆப்கன் அரசியலை பாகிஸ்தான் தன் சுண்டுவிரல் அசைவில் வைத்துக்கொள்ளும். இது மொத்த தெற்காசியாவுக்கும் ஆபத்து' என்றிருக்கிறது இந்தியத் தரப்பு. ஒருவேளை தலிபான்கள் ஆப்கனைப் பிடித்துவிட்டால், அதன் தாக்கம் ஜம்மு காஷ்மீரையும் தாண்டி டில்லி வரை பாயும் என்பது இந்தியாவின் கவலை. ஆப்கனிலிருக்கும் இந்தியர்களை பாதுகாப்பாக இருக்கும்படி எச்சரிக்கையும் வெளியிட்டிருக்கிறது இந்திய வெளியுறவுத்துறை.

எந்தக் காரணத்தைச் சொல்லி ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா படையெடுத்ததோ, இன்று அதே காரணம் மீண்டும் வலுப்பெற அடித்தளம் அமைத்துக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறது அமெரிக்கா. ஒருவேளை, தலிபான்களின் கைகளில் ஆப்கன் முழுவதுமாக விழுந்துவிட்டால், தெற்காசிய அரசியலின் தட்பவெப்பம் முற்றிலும் மாறிவிடும்!

**நன்றி - விகடன்**



# ஹப்புத்தளையில் நான்காவது நாளாகவும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

## தீர்வு கிடைக்கும் வரை தொடரும் எனவும் தெரிவிப்பு



(பதுளை நிருபர் )

ஹப்புத்தளை பகுதியில் ஐந்து பெருந்தோட்டப் பிரிவுகளில் நேற்று நான்காவது நாளாகவும் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஹப்புத்தளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தம்பெதன்ன. பண்டாரஎலிய, தியகல்ல, மவுசாகல, புதுக்காடு பகுதியைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த 4 நாட்களாக தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தோட்ட நிர்வாகத்தினால் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா சம்பளம் பெறுவதாயின் 18 கிலோ கொழுந்து பறிக்கக் கோரி அழுத்தம் கொடுப்பதாகவும் குறைந்த எடையை காட்டும் தராசில் ஏமாற்றி புதிய நவீன இலத்திரனியல் தராசை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் நேற்றும் ஈடுபட்டனர்.

தம்பெதன்ன தேயிலை தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் இது தொடர்பாக காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டனர். தோட்ட நிர்வாகம் இணங்காத காரணத்தினால் தொடர்ந்தும் இவர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த அப்புத்தளை பொலிஸார் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு வலியுறுத்தியதோடு ஹப்புத்தளை பொலிஸ் அதிகாரிகளினால் சுமார் 15 நிமிடம் வரை உரையாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

தீர்வுகள் எதுவும் கிடைக்காத காரணத்தினால் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தொழிலாளர்கள் தீர்மானித்தனர்.

## மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

# பதுளையில் புதிதாக ஆயுர்வேத சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு

ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பதுளை நகரில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடம் ஆயுர்வேத விசேட சிகிச்சைப் பிரிவாக நேற்று ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் பொதுமக்கள் பாவனைக்காக கையளித்துள்ளார்.

பதுளை நகரின் பிரபல தொழிலதிபர்களான புத்ததாஸ சமரஜீவ மற்றும் அய்ரின்ஹில்டா ஆகியோரினால் சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியான குறித்த மூன்று மாடிக் கட்டிடம் அண்மையில் ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊவா மாகாண பிரதான செயலாளர் பி.டீ.விஜயரத்ன, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தயானந்த ரத்நாயக்க, ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் டில்மா பிரேமதிலக்க, மூன்று மாடிக் கட்டிடத்தை அன்பளிப்புச் செய்தவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



# கலவானையில் அரச வங்கிக்குப் பூட்டு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவானை நகரிலுள்ள அரச வங்கி ஒன்று கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டது. வங்கி ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டமையால் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலையடுத்து இவ்வங்கியை மூடிவிட தீர்மானித்ததாக வங்கி நிர்வாகம் நேற்று தெரிவித்தது.

பாதிக்கப்பட்ட கொரோனா நோயாளர் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டதுடன், ஏனைய ஊழியர்கள் மற்றும் தொடர்புபட்டவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விடயமாக வாடிக்கையாளர்களிடம் கவலை தெரிவித்துள்ள வங்கி நிர்வாகம், தமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை அண்மித்த ஏனைய வங்கிகளில் மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. கலவான நகரம் ஏற்கனவே இரண்டு கட்டங்களில் கொவிட் தொற்று அச்சம் காரணமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்



(இரத்தினபுரி நிருபர்)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சௌபாக்கிய நோக்கு திட்டத்தின்கீழ் நச்சுத் தன்மையற்ற உணவு வகைகளை மக்களுக்கு வழங்கும் நோக்கில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் சிறந்த விவசாய நடைமுறையை ஊக்குவிக்கும்“சஜீவயா” வேலைத் திட்டமொன்று சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்று முன்தினம் இரத்தினபுரியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயத் துறை பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கமைய மேற்படி வேலைத்திட்டம் சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சின் கண்காணிப்பின்கீழ் சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்களம், அரசியல் தலைவர்கள், அரச அதகாரிகள், இரத்தினபுரி, கேகாலை மாவட்ட செயலாளர்கள். பிரதேச செயலாளாகள், பிரதேச விவசாயத்துறை அமைப்புகள் என்பவற்றினால் மேற்பார்வை செய்யப்படும்

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்ஜனி ஜயகொடி, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம, கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் அனுர ஹேமகுமார உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# மத்திய மாகாண ஆசிரியர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரல்

(கினிகத்தேனை நிருபர்)

மத்திய மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கான 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரிய இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றம் கோரும்போது குறைந்தபட்சம் 5 வருடங்கள் சேவையை பூர்த்தி செய்திருப்பதோடு, பாடசாலையில் மேலதிக ஆசிரியர் அல்லது ஒரே பாடசாலையில் 8 வருடங்கள் சேவையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம் சேவையின் தேவை கருதி இந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவர்.

அத்துடன், வலயத்திற்குள் இடமாற்றம் மற்றும் வலய மகாணங்களுக்கிடையிலான இடமாற்ற விண்ணப்பங்கள் ... என்ற மத்திய மாகாண திணக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணையத் தளத்தினூடாகவே விண்ணப்பிக்க முடியும்.

மாகாணங்களுக்கிடையில் மற்றும் தேசிய பாடசாலைக்கு விண்ணப்பிக்கும் போது மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள புதிய விண்ணப்பப்படிவத்தை மட்டும் பயன்படுத்த முடியும்.

மாகாணங்களுக்கிடையில் 5 விண்ணப்பங்களும், மாகாண அரச சேவையிலிருந்து தேசிய பாடசாலைக்கு 5 விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கும் அதேவேளை, தேசிய பாடசாலையிலிருந்து மாகாண பாடசாலைக்கு விண்ணப்பிக்கும்போது தேசிய பாடசாலை பணிப்பாளரினால் குறிக்கப்படும் காலவரையறையினுள் தேசிய பாடசாலைகளுக்கான விண்ணப்பப்படிவத்தில் பூர்த்திசெய்தல் அவசியம்.

முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு கிடைக்கக் கூடியதாக அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், இணையத்தினூடாக விண்ணப்பம் மேற்கொள்பவர்களும் அதே நிபந்தனைகளை கவனத்திற்கொள்ளல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் மக்களின் பிரச்சினையை தீர்க்காது

## தொழிற்சங்கங்கள் பூச்சாண்டி காட்டுவதாக புத்திரசிகாமணி தெரிவிப்பு



இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் அவர்களுக்கு இழைக்கப்படும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திடம் முறையிடுவதன் மூலம் தீர்வு பெற்றுக்கொள்ள முடியாது - என முன்னாள் பிரதியமைச்சர் வடிவேல் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஒரு பொலிஸாரோ அல்லது ஒரு நீதிமன்றமோ அல்ல. அவர்களால் தீர்ப்பு கூறவோ அல்லது பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கவோ முடியாது. இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திற்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளோம் என ஊடகங்களில் தொழிற்சங்கங்கள் செய்திகள் வெளியிடுவதன் மூலம் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திற்கு ஒரு முறைப்பாடு கடிதம் அனுப்பினால் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடமும் அரசாங்கத்திடமும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பு வார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட வர்களும் அரசாங்கம் கூறும் பதிலை புகார் செய்தவர்களுக்கு அனுப்பிவைப்பார்கள் அல்லது வருடாந்தம் நடைபெறுகின்ற மாநாட்டில் சமர்ப்பித்து இலங்கை அரசாங்க பிரதிநிதிகள் கூறும் கூற்றை அறிக்கையாக தயாரித்து முறைப்பாடு செய்தவர்களுக்கு பதிலாக அனுப்பி வைப்பார்கள்.

இந்த அரசாங்கத்தின் கூற்று ஏற்கனவே சம்பள நிர்ணைய சபையில் எடுக்கப்பட்ட முடிவாகத்தான் இருக்கும். தொழிற்சங்கங்கள் வெறுமனே இந்தப் பிரச்சினையை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திடம் சமர்ப்பித்தோம் என்று மக்களுக்கு பூச்சாண்டி காட்டுவது எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

அதேவேளை, தொழிற்சங்கங்கள் சம்பள நிர்ணைய சபையில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றாமல்விட்டால் இலங்கையில் நீதிமன்றம் செல்லமுடியும். அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே கூட்டு ஒப்பந்தங்களில் செய்துகொள்ளப்பட்ட சலுகைகளையும் உரிமைகளையும் குறைக்க முடியாது.

அதன்படி தொழிலாளர்களிடம் சந்தா பிடிக்க முடியாதென கூறமுடியாது. தொழிலாளர்களுடைய வேலைப்பளுவை அதிகரிக்கவும் முடியாது. இதையெல்லாம் இன்றைய தொழிற்சங்கவாதிகள் தெரிந்துகொள்ளாமல் ஊடகங்களில் செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சர்வதேச தொழில் ஸ்தாபனம் ஏற்கனவே கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமான நியமங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு நீதிமன்றத்திலும் முதலாளிமார் சம்மேளத்துடனும் நடத்தவேண்டிய பேச்சுவார்தையிலுமே அடங்கியுள்ளது.

சம்பள நிர்ணைய சபையில் எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்தாவிட்டால் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தோட்டக் கம்பனிகளுக்கும் எதிராக வழக்கு தொடரும் உரிமை தொழில் ஆணையாளர் அல்லது தொழிலாளர் இயக்குநர் நாயகத்திற்கும் இருப்பதை தொழிற்சங்கங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வெறுமனே அறிக்கை விடுவதை தொழிற்சங்கங்கள் தொழிலாகக்கொண்டு செயல்படுவதால் தொழிலாளர்களுக்கு எந்தவித நன்மையும் - என்றார்.




# CDB Virtual Infinity Awards 2019/20 விழாவில் நிறுவன நட்சத்திரங்கள் கௌரவிப்பு

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சியில் (CDB) சிறப்பாக செயலாற்றியிருந்த அணி அங்கத்தவர்கள் வருடாந்த CDB Infinity விருதுகள் வழங்கும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்கள். 71 CDB கிளைகளிலிருந்து 1700இற்கும் அதிகமான அங்கத்தவர்கள் இந்த மெய்நிகர் வைபவத்தில் பங்கேற்றனர். கொழும்பு, ஒரபிபாஷா மாவத்தையிலுள்ள CDB தலைமையகத்திலிருந்து இந்த நிகழ்வு நேரலையாக இடம்பெற்றது.

CDB Infinity விருதுகள் வழங்கலினூடாக சிறந்த தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்தி, சிறப்பாக செயலாற்றியிருந்த அணி அங்கத்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர். முன்னைய ஆண்டில் சிறப்பாக செயலாற்றியிருந்த மொத்தமாக 140இற்கும் அதிகமான அணி அங்கத்தவர்கள் இதனூடாக கௌரவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், நீண்டகாலமாக சேவையாற்றியமைக்காக அணி அங்கத்தவர்கள் 100 பேருக்கு அண்மையில் கொண்டாடிய 25ஆவது வருடபூர்த்தியை முன்னிட்டு கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. தவிசாளரின் சவால் கிண்ணம், பணிப்பாளர் சபையின் சவால் கிண்ணம் மற்றும் CDB 100Mn RRT சுப்பர் கோல்ட் விருது போன்றனவும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தன. மேலும் இவ்வருடம் சுப்பர் கோல்ட் விருதை வெற்றியீட்டியவருக்கு புத்தம் புதிய Honda Civic கார் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

CDB இன் முகாமைத்தவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஹேஷ் நாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில், "எதிர்காலத்துக்கு தயார் நிலையில் தொடர்ச்சியான மாற்றங்களால் எழும் சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில் CDBஇனால் எமது அணி அங்கத்தவர்களின் புத்தாக்கங்களை இனங்கண்டு அவற்றை ஊக்குவிப்பதென்பது முக்கியமானதாகும். இதனூடாகவே வியாபாரத்தை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும். CDB Infinity விருதுகள் என்பது எமது அணியினரின் கடுமையான உழைப்புக்குக் கிடைக்கும் வருடாந்த கௌரவிப்பாக அமைந்துள்ளது. அவர்களின் தலைசிறந்த சாதனைகளை




கொண்டாடுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமைந்துள்ளது" என்றார்.

புத்தாக்கமான மற்றும் வெற்றிகரமாக இயங்கும் வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் எனும் வகையில், நிலைபேறாண்மைக்கு அதிகளவு முக்கியத்துவமளித்து செயற்படும் CDBஇனால் தொழிற்றுறைக்கு முன்னோடியான தீர்வுகள் வழங்கப்பட்டு, சகல பங்காளர்களினதும் எதிர்பார்ப்புகளுக்கு வலுச்சேர்க்கப்படுகின்றது. நிறுவனத்தின் போட்டிகரமான அனுகூலம் மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கு பிரதான மூலமாக அதன் ஊழியர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

CDB இன் தவிசாளர் அலஸ்டெயர் கொரேரா கருத்துத் தெரிவிக்கையில், "எதிர்காலத்துக்கு தயாரான நிறுவனமாக திகழ்வதற்கு உதவும் புதிய ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்கு பல முயற்சிகளை இந்த ஆண்டில் நாம் மேற்கொண்டுள்ளோம். மக்களின் வாழ்க்கைக்கு வளமூட்டும் நிலைபேறான செயன்முறைகளினூடாக எமது வியாபாரத்துக்கு பெறுமதிசேர்க்க நாம் எதிர்பார்ப்பதுடன், நிதிச் சேவைகள் துறையில் ஒப்பற்ற முன்னோடியான நிறுவனமாக திகழச் செய்வதற்கு முன்வந்துள்ளோம்" - என்றார்.

பொது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் முன்னோடி நிறுவனமாக சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) திகழ்வதுடன், இலங்கையில் இயங்கும் சிறந்த வங்கிசாரா நிதிச்சேவைகளை வழங்கும் ஐந்து மாபெரும் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. நாடளாவிய ரீதியில் பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் நவீன தொழில்நுட்ப வசதிகளைக்கொண்டு இயங்குகின்றது. மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்கு www.cdb.lk இணையத்தளத்தைப் பார்க்கவும்.

# SLT-MOBITEL டிஜிட்டல் இடைவெளியை நிவர்த்திசெய்யும் முயற்சிகளுக்கு பங்களிப்பு









இலங்கையில் டிஜிட்டல் இடைவெளியை நிவர்த்திசெய்யும் பணிகளில் பங்களிப்பு வழங்கும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப, தொலைத்தொடர்பாடல் மற்றும் மொபைல் சேவைகள் பங்காளரான SLT-MOBITEL, இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) கமட்ட சன்னிவேதனய திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்பட்ட பனான, வெலிகேபொல பிரதேசத்தில் முதலாவது 4G கோபுரத்தை நிறுவியிருந்தது. இந்நிகழ்வு 2021 ஜூலை 5ஆம் திகதி இடம்பெற்றது.

இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனாநாயக்க, SLT-MOBITEL குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனவிரத்ன, Mobitel (Pvt.) Ltd. இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரண, SLT-MOBITEL இன் சிரேஷ்ட நிர்வாக அங்கத்தவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் இதர விருந்தினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கமட்ட சன்னிவேதனய திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட முதலாவது 4G கோபுரமாக இது அமைந்திருப்பதுடன், சப்ரகமுவ மாகாணத்தின் இணைப்புத்திறனை மேலும் மேம்படுத்துவதாக இந்த 4G LTE கோபுரம் அமைந்திருக்கும்.

தனியார் மற்றும் அரச துறைகளின் உட்கட்டமைப்பு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் SLT-MOBITEL கைகோர்த்து, நாட்டில் 100 சதவீதம் 4G LTE வலையமைப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் பணிகளை முன்னெடுத்தவண்ணமுள்ளது. இதனூடாக பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த சமூகங்கள் எதிர்நோக்கும் இணைப்புத்திறன் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்துக்கு SLT-MOBITELஇன் ஆதரவு என்பது, டிஜிட்டல் புரட்சியை நோக்கிய தேசத்தின் பயணத்துக்கு உதவியாக அமைந்திருக்கும்.












# தனியார் துறையினருக்கான ஆகக் குறைந்த சம்பள தொகையை 12,500 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை

## தொழிலமைச்சுசார் ஆலோசனைக்குழுவில் விசேட கவனம்





இந்நாட்டின் தனியார் துறை பணியாளர்களுக்கான ஆகக்குறைந்த சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலம், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று (07) நடைபெற்ற தொழிலமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது.

தற்போது காணப்படும் ஆகக் குறைந்த சம்பளத் தொகையான 10 ஆயிரம் ரூபாவை 12 ஆயிரத்து 500 ரூபாவாகவும், ஆகக் குறைந்த நாள் சம்பளத் தொகையான 400 ரூபாவை 500 ரூபாவாக அதிகரிப்பதற்கும், 2016ஆம் ஆண்டு 03ஆம் இலக்க வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனச்சட்டத்தின் 03 ஆவது சரத்தை திருத்துவதாகவும் இது அமையும். இச்சட்டமூலம் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினூடாக விதிக்கப்பட்ட எந்தவொரு தடைக்கோ அல்லது கட்டுப்பாடுகளுக்கோ உட்படாது என்றும், அரசியலமைப்புக்குட்பட்டது என்றும் சட்டமா அதிபர் சட்டரீதியான சான்றிதழ் வழங்கியிருப்பதாகவும், அதற்கமைய குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் 2017ஆம் ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் 2018ஆம் ஆண்டிற்கான தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் ஆண்டறிக்கை ஆகியவையும் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, ரஜிகா விக்ரமசிங்க, கோகிலா ஹர்ஷினி குணவர்த்தன ஆகியோரும், தொழிலமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# இன்றைய ராசி பலன்

நாள் : 08.07.2021 வியாழக்கிழமை

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**மேடம்** உங்கள் திறமைக்கு வேலை செய்யுமிடத்தில் தகுந்த அங்கீகாரம் பெறுவீர்கள். தம்பதியரிடையே உறவுகள் சிறப்பாக இருக்கும்.

**ரிஷபம்** உங்கள் வேலையை மற்றவருக்கு கொடுப்பதோ, வேறு யாருக்காகவும் பொறுப்பேற்றுக் கொள்ளவோ வேண்டாம். பிற பெண்களின் விடயங்களில் கவனமாக இருப்பது நன்மை.

**மிதுனம்** பங்குச்சந்தை வர்த்தகமும், புதிய தொழில் நிதியுதவிகளும் சிறப்பாக நடைபெறலாம். தம்பதியருக்கிடையிலும், காதலர்களுக்கிடையிலும் அன்பு அதிகரிக்கும்.

**கடகம்** வணிகர்கள் கடுமையான உழைப்பில் மட்டுமே நன்மை. வேற்று மனிதர்களின் நட்பில் கவனம். திட்டமிடாத புதிய பயணங்களைத் தவிர்க்கவும்.

**சிம்மம்** வழக்குகள் மேம்படும். வேலை செய்யுமிடங்களில் பிரச்சினைகள் நீங்கும். பெண்கள் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

**கன்னி** இன்று நன்மையான நாள். திறமையின் நம்பிக்கையால் பணிகளில் முயற்சி அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பும், நண்பர்களின் உதவிகளும் அதிகரிக்கும்.

**துலாம்** ஏற்றுமதி/ இறக்குமதி வணிகர்களுக்கு நல்ல நாள். மனதில் துன்பம் நீங்கி, உடல்நலமும் மேன்மை பெறலாம். பதவியுயர்வு சந்தர்ப்பங்கள் உருவாகலாம்.

**விருச்சிகம்** உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். வணிகத்தில் மேலதிக கவனம் தேவை. அவசரமற்ற புதிய பணிகளை நிறுத்தி வைத்தலும் நன்மை. அனைத்து விடயங்களிலும் நிதானம் தேவை.

**தனுசு** மற்றவர்களின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றாலும் சுயமுடிவால் நன்மை பெறலாம். உடல்நலம் சிறப்பாக இருக்கும். நல்ல நாளாக அமையலாம்.

**மகரம்** பழகிய சிலரால் சிறு இழப்புகள் நேரலாம். புதிய பணிகள் உண்டாகும். புதிய வழக்கங்களின் தேவையை நடைமுறைப்படுத்தப்படலாம்.

**கும்பம்** விவசாயத்தில் கவனம் தேவை. மாணவர்களின் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கப்பட வேண்டும். பிறரை சேராமல் சுயமாக வெற்றிகளைப் பெறலாம்.

**மீனம்** விஞ்ஞானப் பட்டம் பெற்றவர்களுக்கு புதிய வேலைகள் கிடைக்கும். பரம்பரை சொத்துகள் கிடைக்கப் பெறலாம். உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

# காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட சிறுவனின் உடல் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட 14 வயது சிறுவனின் உடல் கூற்று மாதிரிகள் மொரட்டுவை பல்கலைக்கழக சட்ட மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், சிறுவனின் உடல் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் வீட்டின் பின்பகுதியில் தலையில் அடிபட்ட காயத்துடனும், கழுத்தில் வெட்டுக்காயத்துடனும் நேற்று முன்தினம் (06) காலை சடலமாக மீட்கப்பட்டார். சிறுவனின் மரணம் தொடர்பில் சந்தேகம் வெளியிட்ட பொலிஸார் வவுனியா தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிறுவனின் சடலத்திற்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு கொரோனா தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்ட பின்னர் வவுனியா சட்ட வைத்திய அதிகாரி ஈ.ஜி.யூ.என்.குணரட்ன மற்றும் பொலிஸார் முன்னிலையில் பிரேத பரிசோதனைகள் இடம்பெற்றிருந்தன. இருப்பினும், மேலதிக தகவல்கள் தேவைப்பட்டமையால் சிறுவனின் உடல் கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதனையடுத்து சிறுவனின் மரணம் தொடர்பில் சந்தேகம் உள்ளமையால் உடலை எரியூட்டாமல் புதைக்கவேண்டுமென சட்ட வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டு சடலம், பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உலக அரசியல் கட்சி மாநாட்டில் ரணில் விக்ரமசிங்க பங்கேற்பு



சீன பொதுவுடமைக் கட்சியின் 100 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக அரசியல் கட்சி மாநாட்டுக்கு (World political parties summit) ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டார்.

சூம் தொழில்நுட்பத்தினூடாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருடன், பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன மற்றும் உப தலைவர் சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புறக்கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திலிருந்து இந்த மாநாட்டில் அவர்கள் கலந்துகொண்டனர்.

# சு.க.வுக்கு எதிராக புதிய கட்சி ஆரம்பிக்கும் உரிமை குமார வெல்கமவுக்கு இல்லை

## தயாசிறி ஜயசேகர கடும் கண்டனம்

(படப்பிடிப்பு -எஷான் தஸநாயக்க)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஒத்த புதியதொரு கட்சியை உருவாக்கும் உரிமை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு இல்லையென்றும், இது மக்களின் வாக்குகளுக்கு அநீதி இழைக்கும் செயற்பாடென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

புதிய கட்சியை உருவாக்கும் குமார வெல்கமவின் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (07) தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரை தவறாக பயன்படுத்தி எமது கட்சி உறுப்பினர்களை குழப்பமடையச் செய்யும் வகையில் குமார் வெல்கம புதிய கட்சியொன்றை



ஆரம்பிப்பதற்கான யோசனையொன்றை தேர்தல் ஆணைக்குழுவிடம் முள்வைத்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரைப் பயன்படுத்தவோ, சுதந்திரக் கட்சிக்கு ஒத்த பெயரை பயன்படுத்துவதற்கான உரிமையோ குமார வெல்கமவுக்கு இல்லை. சட்டத்துகமைய அது பாரிய குற்றமாகும். அதுதொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எங்களின் எதிர்ப்பை முன்வைத்துள்ளோம். அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பிலேயே களுத்துறை மாவட்டத்தில் தேர்தலில் அவர் போட்டியிட்டுள்ளார். அவ்வாறானால், ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வாக்குகளை பெற்றுக்கொண்டு அங்கிருந்து வெளியேறி புதிய கட்சியொன்றை உருவாக்கும்போது அது பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும்.

காரணம், ஐ.தே.க.வுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் வாக்களித்தவர்கள் நாட்டிலுள்ள நிலைமை தொடர்பில் அச்சமடைய கூடும். இவ்வாறான நிலைமைகள் தொடருமானால் சகல கூட்டணிகளும் நெருக்கடியை சந்திக்க வேண்டி ஏற்படும். களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்காளர்களே குமார வெல்கமவுக்கு வாக்களித்தார்கள்.

ஆகவே, அவருக்கு வாக்களித்தவர்களுக்கு இது அநீதி ஏற்படுத்தும் செயற்பாடாகும். குமார் வெல்கம மீண்டும் தனியான ஒரு பாதையில் செல்ல முயற்சிக்கிறார். இன்னுமொரு எம்.பி.க்கு கிடைக்க வேண்டிய இடத்தை குமார வெல்கம இல்லாமல் செய்துள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

# உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(அனுராதபுரம்)

அனுராதபுரம் சாந்த ஜோசப் மகா வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள குளத்துப்பகுதியில் உயிரிழந்திருந்த ஆண் ஒருவருடைய சடலமொன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் மாலை குறித்த பகுதிக்கு சென்ற அனுராதபுரம் பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர்.

பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள சடலம் யாருடையது என அடையாளம் காணப்படாத நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான ஆரம்பகட்ட நீதவான் விசாரணைகள் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தால் நடத்தப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# குற்றம் தவிர்

Police Roundup

### கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது - நாரம்மலை

நாரம்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிவுல்கல்ல, கஜூலந்த தோட்டத்தில் நேற்று முன்தினம் பகல் 12.30 மணியவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 01 கிலோ 40 கிராம் கேரள கஞ்சாவுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காசிவத்தை, மெடியகனே பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் ஒருவர் கைது - வத்தளை

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய வத்தளை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.50 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 60 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹெந்தல, வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் ஒருவர் கைது - களுத்துறை

களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவினரால் பிங்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாராம்பிட்டிய, பிங்வத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது அந்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில் 750 கிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிங்வத்தை, பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் ஒருவர் கைது - பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்கஹாகும்புர பிரதேசத்தில் பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை 5.55 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட மேலுமொரு சுற்றிவளைப்பின்போது 06 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இன்னுமொரு நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 16ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### ஹெரொயினுடன் ஒருவர் கைது - பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிசர உயனவில் பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை 5.05 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 03 கிராம் 580 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் நபரொருவர் கைது - கொட்டாவை

கொட்டாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொஹொரகொடெல்ல புகையிரத வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.00 மணியளவில் மேல் மாகாணத்தின் தெற்கு குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொட்டாவை, பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயது நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது - கல்கிஸை

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை புகையிரத நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 100 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கொலைச் சம்பவம் - கதிர்காமம்

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகஹ வீதி, சமுர்த்தி மாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை 7.30 மணியளவில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கதிர்காமம் நாகஹவீதிய, சமுர்த்தி மாவத்தையைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் தெபரவெவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த கொலைச் சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**தொகுப்பு - நா.தினுஷா**

# நாவலடி ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை தரமுயர்த்தித் தருமாறு மக்கள் கோரிக்கை

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

தியாவட்டுவான் நாவலடி ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையாக தரமுயர்த்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கை மக்களின் வைத்திய தேவையின் ஒரு பகுதியை ஆயுர்வேத மத்திய மருந்தகங்களும் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலைகளும் நிறைவேற்றுகின்றன. அந்தவகையில் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள் திறக்கப்பட்டு மக்களுக்கான வைத்திய சேவை திறன்பட வழங்கப்பட்டு வருகின்றது.

மக்களின் தேவை அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு மத்திய மருந்தகங்கள் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளாக தரமுயர்த்தப்பட்டு அதற்கான ஆளனி, பௌதீக வளங்கள் மேம்படுத்தப்பட்டு, சிறப்பான சேவைகளை மாகாண சுகாதாரத் திணைக்களமும் மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மத்திய சுகாதார அமைச்சுகளும் மேற்கொண்டு வருகின்றன.

அதனடிப்படையில் கடந்த 26.09.2011ஆம் திகதிமுதல் இயங்கிவரும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தியாவட்டுவான் நாவலடி மத்திய மருந்தகமும் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று தெற்கு, கோறளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலக எல்லைக்குள் வசிக்கும் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவையாக




ஆயுர்வேத வைத்தியசாலையின் தேவை இருந்துவருகின்றது.

கல்குடா தொகுதியை உள்ளடக்கிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மத்திய மருந்தகங்கள் காணப்பட்டாலும், அவை எவையும் இதுவரை மத்திய மருந்தகங்களுக்குரிய தரத்தில் தரமுயர்த்தப்படவோ போதியளவு ஆளனி, பௌதீக வளங்கள் செய்துகொடுக்கப்படவோ இல்லை.

குறித்த தியாவட்டுவான் நாவலடி மத்திய மருந்தகம், கொழும்பு-மட்டக்களப்பு மற்றும் மட்டக்களப்பு - திருமலை பிரதான வீதியில் அமைந்துள்ளமையினால் இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் மிக இலகுவாக போக்குவரத்து செய்யும் வகையில் அமைந்துள்ளதுடன், மேற்குறித்த ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தினமும் அதிகளவான மக்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இருந்தபோதிலும், தங்கி சிகிச்சைபெற மேம்படுத்தப்பட்ட வசதியின்மை காரணமாக மேலதிக சிகிச்சைக்காக தூரப் பிரதேசங்களிலுள்ள மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு அனுப்பவேண்டிய நிலை உருவாவதுடன், ஏறாவூர், புதுக்குடியிருப்பு போன்ற தூரப்பிரதேசங்களுக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இப்பிரதேச எல்லைக்குள் அதிகளவான கிராமங்கள் பின்தங்கிய பிரதேசங்களாகவும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களைக் கொண்டதாகவும் காணப்படுவதன் காரணமாக பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தியாவட்டுவான் நாவலடி மத்திய மருந்தகத்தினை ஏ தரத்திற்கு தரமுயர்த்தி தங்கி சிகிச்சைபெறும் வசதியை ஏற்படுத்த கடந்த 2019 மே மாதமளவில் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் காலப்பகுதியில் முன்னெடுப்புச் செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும்படி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடந்த 17.01.2020அன்று கடிதம் அனுப்பப்பட்டும் அக்கடிதம் எந்தவித முன்னெடுப்பும் எடுபடாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா அச்சுறுத்தல், முடக்கம், பயணத்தடை உள்ள சூழலில் இவைகள் சாத்தியமில்லாத நிலையில் இவ்வைத்தியசாலை தரமுயர்த்தப்படுவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

தற்போதைய அரசாங்கமும் ஆயுர்வேத வைத்தியத்துறைக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத்துறை ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் இதனை தரமுயர்த்தத் தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

# யுத்த காலத்தைபோன்று அச்சத்துடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது

## கல்முனை பிரதேச செயலாளர் லியாகத் அலி

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

யுத்த காலத்தைபோன்று அச்சமான சூழலுக்கு மத்தியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க





வேண்டியுள்ளது - என கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் சமுர்த்தி திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் சௌபாக்கிய வாரம் வேலைத்திட்டத்தின் போது சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு புதிய வீட்டிற்கான அடிக்கல் நாட்டிவைக்கும் நிகழ்வு நேற்று நற்பிட்டிமுனையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே பிரதேச செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் பிரதேச செயலாளர் உரையாற்றுகையில், முரண்பாடுகளுக்கு மத்தியில் அபிவிருத்தி என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாக மாறிவிட்டது. எதிர்கால சந்ததிகளுக்குத் தேவையான வளங்களை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் முன்னெடுக்க வேண்டும். யுத்த சூழல் காலகட்டத்தையும் பார்க்க இன்று கண்களுக்கு தெரியாத வைரஸுடன் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். இதன் தாக்கத்திற்கு ஈடுகொடுத்து பணியாற்றவேண்டியுள்ளது.

கடந்த வாரம் எமது சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரையும் இழந்துள்ளோம். இன்னும் பல உறவுகளை இழந்துள்ளோம். தொடர்ந்தும் கொரோனா நோயாளர்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்ற தகவல்களையும் அறிகிறோம். எனினும், அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை தொடர்ந்தும் வழங்கிவருகிறோம்.

இந்நிலையில், நாட்டில் வழங்கப்பட்ட மூன்று மில்லியன் தடுப்பூசிகளுக்குள் எமது கல்முனை பிராந்திய உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படாமை கவலையாக இருக்கிறது. என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம்.முபீன், திட்ட முகாமையாளர் திருமதி நயீமா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





கல்முனை வலயத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மாணவர் கல்வியை மேம்படுத்த பிரதேச கற்றல் வள நிலையங்கள் ஆரம்பமாகியுள்ளன. நிந்தவூர் அல்-அஷ்ரப் தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கற்றல் கற்பித்தல் இடம்பெறுவதையும் உதவிக் கல்விப் பணிப்பாளர் முகம்மட் சாஜித் மேற்பார்வை செய்வதையும் படங்களில் காணலாம். (சிராஜுதீன்)

# கல்முனையில் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் செயலமர்வு

(எம்.என். எம்.அப்ராஸ்)

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்தும் இயற்கை முறையிலான சேதனப் பசளை உற்பத்தியினை ஊக்குவிக்கும் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன.





இதற்கமைய சேதனப் பசளை உற்பத்தி முறைகள் பற்றிய செயலமர்வு கல்முனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலகத்தின் இஸ்லாமாபாத் கிராமசேவகர் பிரிவிலுள்ள சமுர்த்தி பெறும் குடும்பங்களை ஊக்குவிக்கும் முகமாக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இச்செயலமர்வு சமுர்த்தி உத்தியோகத்தர் ஐ.எல்.அர்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வில் பிரதான வளவாளராக கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் போதனாசிரியர் என்.யோகலக்ஷ்மி கலந்துகொண்டு, வீட்டுத்தோட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் அதன் பயன்கள் தொடர்பில் விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் இதன்போது சேதனப் பசளை தொடர்பில் கலந்துகொண்டவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்துகொண்டு பயன்பெற்றனர்.

அத்துடன் தாம் சேதனப் பசளை உற்பத்தி செய்ய ஆர்வத்துடன் உள்ளதாக கலந்துகொண்ட பயனாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதன்போது கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சிரேஷ்ட கருத்திட்ட முகாமையாளர் எம்.எஸ்.நயிமா உட்பட சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் எஸ்.எல்.அசீஸ், பிரதேச கருத்திட்ட உதவியாளர் எ.எஸ்.எம்.ஜவ்பர், சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஊழியர் நால்வருக்கு கொரோனா; வாழைச்சேனையில் வங்கிக்கு பூட்டு

(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை மக்கள் வங்கியில் பணிபுரியும் நான்கு பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக சுகாதாரப் பிரிவினர் குறித்த வங்கியை தற்காலிகமாக மூடி வைத்துள்ளனர்.

இந்நிலையில், வாடிக்கையாளர்களின் நலன் கருதி பணம் வைப்பிலிடும் மற்றும் பணம் எடுக்கும் இயந்திரப் பகுதி சேவைகள் இயங்கி வருகின்றன.

அத்துடன், மக்களின் தேவைகளை இலகுபடுத்த நடமாடும் ஏ.ரி.எம்.சேவை ஒன்றும் வங்கிக்கு முன்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் டைனமைட் வெடித்ததில் மீனவர் ஒருவர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

**திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜாயா நகர் பகுதியில் டைனமைட் வெடித்ததில் நபரொருவர் நேற்று உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.**

**இவ்வாறு உயிரிழந்தவர் குச்சவெளி-ஜாயாநகர் பகுதியைச் சேர்ந்த இமாம்தீன் அஷ்மீர் (26 வயது) என தெரியவருகின்றது.**

**சம்பவம் குறித்து தெரியவருவதாவது, டைனமைட் என்றழைக்கப்படும் வெடிபொருளை பயன்படுத்தி மூவர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது டைனமைட் வெடித்ததில் குறித்த மூன்று பேரில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.**

**உயிரிழந்த குறித்த நபரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# செம்மண்ணோடையில் வீடுவீடாகச் சென்று நிவாரணப் பொதிகள் வழங்கிவைப்பு

(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட



செம்மண்ணோடை பிரதேசம் முழுவதற்கும் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குறித்த பிரதேச மக்கள் வாழ்வாதாரங்களை இழந்த நிலையில் காணப்படுகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு பிரதேச மக்களுக்கு இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

செம்மண்ணோடை பள்ளிவாசல்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் ஒன்றியம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறித்த நிவாரணப் பணி ஏழைகள், பணக்காரர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பாகுபாடின்றி அனைவருக்கும் வழங்கப்பட்டு வருவதாக ஒன்றியத்தின் தலைவர் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி தெரிவித்தார்.

ஒன்றியத்தின் தலைவர் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்நிகழ்வில், ஒன்றியத்தின் ஆலோசகரும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.ரீ.எம்.ரிஸ்வி மஜீதி, கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பள்ளிவாசல்கள் நிர்வாகத்தினர், பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கல்முனைக்கு கொவிட் தடுப்பூசி வழங்க நடவடிக்கை

## மாநகர முதல்வர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்திற்கு கொவிட் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வந்தமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்;

எமது நாட்டில் தீவிரமாக பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் கட்டம் கட்டமாக தடுப்பூசிகளை கொள்வனவு செய்து, அவை உரியவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன. கடந்த மாத முற்பகுதியில் மாத்திரம் 04 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டு, சுகாதார அமைச்சினால் அவை அனைத்து மாவட்டங்களுக்கும் ஏக காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அவற்றுள் கிழக்கு மாகாணத்தின் 03 மாவட்டங்களுக்கும் தலா 25,000 சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்ட போதிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனைப் பிராந்தியம் உள்வாங்கப்படாமல்



முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இங்கு கொரோனா வைரஸ் தொற்று வீதம் குறைந்தளவில் இருந்தமையினாலேயே கல்முனைப் பிராந்தியத்திற்கு தடுப்பூசி கிடைக்கவில்லையென சுகாதாரத் தரப்பினரால் அப்போது கூறப்பட்டது.

எவ்வாறாயினும் பின்னர் கல்முனைப் பிராந்தியத்தில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்து வருவதுடன், மரணங்கள் ஏற்பட்டு வருவதையும் இதனால் கல்முனையின் நிலைமை மோசமடைவதையும் இப்பகுதியில் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டியவர்களுக்கு அது கிடைக்காமல் தவிர்க்கப்பட்டதன் விளைவே இத்தொற்று பரவல் அதிகரிப்புக்கு காரணமாக இருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டி, கல்முனைக்கு கொவிட் தடுப்பூசிகளை அவசரமாக பெற்றுத்தர ஆவன செய்யுமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடந்த மாத பிற்பகுதியில் கடிதமொன்றை அனுப்பியிருந்தேன்.

அத்துடன், ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கல்முனையின் ஆபத்தான நிலைமை தொடர்பில் விளக்கியிருந்தேன். இதையடுத்து எமக்கு கொவிட் தடுப்பூசிகளை பெற்றுத்தருவதற்கு ஜனாதிபதி முன்வந்திருக்கிறார். விரைவில் எமது கல்முனைப் பிராந்தியத்திற்கு ஒரு தொகை தடுப்பூசி வழங்கப்படும் என்று எமக்கு அறிவிக்கப்பாட்டிருக்கிறது.

எமது கோரிக்கையை உடனடியாக பொறுப்புடன் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்தமைக்காக ஜனாதிபதிக்கு இப்பிராந்திய மக்கள் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதாக முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் குறிப்பிட்டார்.

# வியாழேந்திரனின் பாதுகாவலரால் கொல்லப்பட்டவருக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம்செய்ய முயன்ற 16 பேர் கைது

## பொலிஸ் நிலையத்திற்குள் செல்ல ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டின் முன்னால் அவரது மெய்ப்பாதுகாவலரால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவருக்கு நீதிகோரி அவரது தாய், தந்தை உட்பட பொதுமக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட பஸ்ஸில் நகருக்கு வந்த 16 பேரை நேற்று பகல் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.



இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலர் கடந்த மாதம் 21ஆம் திகதி பொதுமகன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் எனபவர் உயிரிழந்தார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், உயிரிழந்தவரின் பெற்றோர் மற்றும் பொது மக்கள் ஒன்றிணைந்து நீதிகோரி காந்தி பூங்காவிற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுப்பதற்காக ஏற்பாடுசெய்யப்பட்டு, பஸ் ஒன்றில் வந்திருந்ததுடன், அங்கு இளைஞர்களும் ஒன்றிணைந்திருந்தனர்.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்கு பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வந்தவர்களை அங்கிருந்து எச்சரித்து, ஆர்ப்பாட்டங்கள், ஒன்றுகூடலுக்கு அரசாங்கம் தடைவிதித்திருப்பதாக தெரிவித்து திருப்பியனுப்பினர்.

அதேவேளை, பஸ்ஸில் வந்தவர்கள் அங்கிருந்து விலகிச்சென்ற நிலையில், அவர்களை பொலிஸார் பின்தொடர்ந்து அந்த பஸ்ஸில் பயணித்தவர்களை பஸ்ஸுடன பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று அங்கு தடுத்துவைத்து, அதில் இருந்த உயிரிழந்தவரின் பெற்றோர் உட்பட 16 பேரை கைதுசெய்துள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் நிலையத்துக்கு ஊடகவியலாளர் செல்வதற்கு பொலிஸாரின் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், இதில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு கொரோனா தொற்று பரிசோதனையான அன்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பாண்டிருப்பில் 13 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் இருவருக்கு கொரோனா தொற்று

*(பாண்டிருப்பு நிருபர்)*

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் நேற்று 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் இருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தொடர்ச்சியாக பல்வேறு கொரோனா விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் பிரதேசத்தில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் மற்றும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது நடமாடுபவர்களுக்கு அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புபட்டவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறானவர்களுக்கு அன்ரிஜன், பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாவிதன்வெளியில் சௌபாக்கியா வேலைத்திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

*(ஏ.எல்.எம்.ஷினாஸ்)*

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி திணைக்களம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இதன்போது சமுர்த்தி உதவிமூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், சுயதொழில் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்திற்கு கடன் உதவிகள், இலவச மின் இணைப்புகள் போன்ற வேலைத்திட்டங்கள் பயனாளிகளிடம்





'சௌபாக்கியா சமுர்த்தி வாரத்தை' முன்னிட்டு பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வேலைத்திட்டங்களை கையளித்தார். கையளிக்கப்பட்டன.

சுகாதார வழிகாட்டல் மற்றும் நடைமுறைக்கு அமைய நடைபெற்ற இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சிவம், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# ஓட்டமாவடி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வாக ஆழ்துளைக் கிணறு திறந்துவைப்பு

*(கல்குடா நிருபர்)*

ஓட்டமாவடி நாவலடி மதீனா பள்ளிவாசலை அண்டி வாழும் மக்களின் நீண்டநாள் பிரச்சினையாக காணப்பட்ட குடிநீர்ப் பிரச்சினையை



தீர்க்கும் வகையில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மக்களுக்காக குடிநீர்த் திட்டம் திறந்துவைக்கப்பட்டது.

ஓட்டமாவடி நாவலடி மதீனா பள்ளிவாசலில் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபரின் வேண்டுகோளுக்கிணங்கவும், முன்னாள் மதினா பள்ளிவாசலின் செயலாளர் ஜிப்ரி கலந்தர் மேற்பார்வையில் சுமார் 380 அடியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மக்களுக்காக குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட்டது.

நாவலடி மதீனா பள்ளிவாசலை அண்டி வாழும் பொதுமக்களது குடிநீர்த் தேவைகளை கருத்திற்கொண்டு சுமார் 2000 லீற்றர் தண்ணீர் தாங்கி கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபரின் வேண்டுகோளுக்கிணங்க அல்-நூர் சமூக சேவைகள் அமைப்பின் தவிசாளர் அலியார் ஹாஜியாரினால் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மக்களின் பாவணைக்காக கையளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர்,



அல்-நூர் சமூக சேவைகள் அமைப்பின் கிழக்கு மாகாண அமைப்பாளர் எம்.நளீம், ஏறாவூர் இணைப்பாளர் எம்.அசன், ஊர்ப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மருதமுனையில் வீடொன்றிலிருந்து எம்–16 ரக துப்பாக்கி ரவைகள் மீட்பு

## சந்தேகநபரொருவர் கைது

*(பாறுக் ஷிஹான்)*

மருதமுனையில் வீடொன்றிலிருந்து 15 துப்பாக்கி தோட்டாக்கள் அடங்கிய பொதி ஒன்றினை கல்முனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை 5ஆம் கிராமசேவகர் பிரிவு அல்-ஹம்றா வீதியிலுள்ள



வீடொன்றின் கூரையில் எம்-16 துப்பாக்கிக்கு பயன்படுத்தும் தோட்டாக்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி தோட்டாக்கள் மீட்கப்பட்ட வீட்டு உரிமையாளர் தற்போது கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

கல்முனை பொலிஸ் விசேட பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று மதியம் இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றதுடன், அவ்வீட்டிலிருந்து 54 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரும் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கிவைப்பு

*(வி.சுகிர்தகுமார்)*

அரசாங்கம், நாட்டிலுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தினையும் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 5 கலைஞர்களுக்கான 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கும் பணி நேற்று இடம்பெற்றது.





இதற்கமைவாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக உதவி அவசியமான கலைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் அறிவுறுத்தலுக்கமைய பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.கோகுலதாஸ் கிராம உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் காசோலைகள் கலைஞர்களின் வீடுகளுக்கு கொண்டுசென்று வழங்கப்பட்டன.

குறித்த கலைஞர்கள் கடந்த வருடமும் இவ்வாறு உதவித்தொகையினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் வயோதிப பெண்மணி ஒருவரின் தங்கச்சங்கிலியை அறுத்துச்சென்ற திருடன் கைது

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு நகர் லயன்ஸ் கிளப் வீதியில் வயோதிப பெண்மணி ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச்சென்ற 50 வயதுடைய கூளாவடி பகுதியைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் இரவு கைதுசெய்ததுடன், கொள்ளையிட்ட தங்கச்சங்கிலியை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் மாங்காய் பிடுங்கச் சென்றவர், அவ்வீட்டில் 77 வயதுடைய வயோதிபப் பெண்மணி தனிமையில் இருந்தபோது வீட்டினுள் சென்று அவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பி ஓடியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து பொலிஸார் குறித்த திருடனை நேற்று முன்தினம் இரவு கைதுசெய்ததுடன், திருடப்பட்ட தங்கச்சங்கிலி விற்பனை செய்யப்பட்ட நிலையில் நகைக்கடை ஒன்றிலிருந்து மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலை – சினாபுர பகுதிக்குள் முதலை புகுந்ததால் மக்கள் அச்சம்

*(கந்தளாய் நிருபர்)*

திருகோணமலை மாவட்டத்தின் மக்கள் குடியிருப்புப் பகுதியான சிங்கபுர பகுதிக்குள் முதலையொன்று புகுந்ததால் மக்கள் அச்சத்தில் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.



நான்கு அடி நீளமுடைய முதலையொன்று சினாபுர பகுதியிலுள்ள வீடொன்றிக்குள் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் புகுவதற்கு முற்பட்டபோது பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் முதலையை பிடித்துள்ளார்கள்.

பின்பு வனஜீவராசி அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டு முதலையை ஒப்படைத்தார்கள். இப்பகுதியில் இதற்கு முன்னரும் இவ்வாறு முதலையொன்று பிடிபட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கோறளைப்பற்று மத்தி பிரதேசத்தில் மீனவர்கள் – வியாபாரிகளுக்கு தடுப்பூசி

*(எச்.எம்.எம்.பர்ஸான்)*

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவிலும் வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கான் தலைமையில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதியிலுள்ள மீனவர்கள், வியாபாரிகள் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு நேற்று வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டது.





தடுப்பூசியை செலுத்திக்கொள்ள ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடியில் சமுர்த்தி திணைக்களத்தால் மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில்

*(கல்குடா நிருபர்)*

ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி திணைக்களத்தினால் 'சிப்தொர' புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.





பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம்.சாஜஹான், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.நியாஸ், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களில் உயர்தர கல்வியை கற்கும் 122 மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 1500 ரூபா வீதம் பத்து மாத கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதாக பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

உயர்தரக் கல்வியை கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு சிப்தொர புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் நிதிகள் வழங்கப்பட்டுள்ளக.

இந்த நிதி மூலம் மாணவர்கள் உயர்தர கல்வியை பூர்த்திசெய்யும் வரை கல்வி கற்கவேண்டும். இடையில் கைவிடும் பட்சத்தில் சிப்தொர கொடுப்பனவு மாத்திரம் அல்ல சமுர்த்தி முத்திரை கொடுப்பனவும் நிறுத்தப்படும் என்றும் பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

# கிண்ணியா தள வைத்தியசாலையில் மரண விசாரணைகளை மேற்கொள்ள நிரந்தர இடமின்மையால் அதிகாரிகள் அசௌகரியம்

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா தள வைத்தியசாலையில் மரண விசாரணைகளை மேற்கொள்வதற்காக உரிய திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸாருக்கு நிரந்தர இடமின்மை காரணமாக விசாரணைகளின்போது காலதாமதம் ஏற்படுவதாக புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்குரிய ஒரு மரணம் ஏற்படுகின்றபோது குறித்த வைத்தியசாலையில் நிரந்தர அலுவலகமோ, உரிய வசதிகளோ இல்லாமையின் காரணமாக அங்குமிங்கும் பெரும் சிரமத்துடன் விசாரணைகளை உரியவர்கள் மேற்கொள்கின்றனர்.

கொரோனா கால மூன்றாம் அலையின்போது கிண்ணியா பகுதியில் ஏற்பட்ட மரணங்களின் விசாரணைகளை மேற்கொள்கின்றபோது கிண்ணியா தளவைத்தியசாலையில் இவ்வாறான நெருக்கடிக்கு மத்தியில் நிரந்தர இடமின்மை காரணமாக அங்குமிங்கும் இருந்தே விசாரணைகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 40 க்கும் அதிக மரண விசாரணைகள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, உரிய திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரிக்கும் விசாரணைகளை மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வைத்தியசாலையில் நிரந்தர அலுவலகமொன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 14 பேர் கைது

## பதினான்கு உழவு இயந்திரங்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - வடமுனை பிரதேசத்திலுள்ள வீரான்டவில் பகுதியிலுள்ள ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 14 பேரை நேற்று முன்தினம் (06) விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்ததுடன், 14 உழவு இயந்திரங்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் (06) அதிகாலை விசேட அதிரடிப்படையினருடன் மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் ஒன்றிணைந்து முற்றுகையிட்டனர். இதன்போது சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 14 பேரைக் கைதுசெய்ததுடன், 14 உழவு இயந்திங்களையும் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

# நாட்டைத் திறக்காவிட்டால் பொருளாதாரம் பாதிப்படையும்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்

(கே.எ.ஹமிட்)

நாட்டைத் திறக்காமல் விட்டால் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படையும் அபாயம் ஏற்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றரை வருடத்துக்கு மேலாக கொரோனா தாக்கத்தால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம், இதன் காரணமாக எமது பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய வைக்க முடியாது.

பொருளாதாரம் பாதிப்பதால் முதலாவது பாதிக்கப்படுவது பொதுமக்கள். ஆகவே, மக்களை பாதிக்கவிட முடியாது. இந்நிலையில், மிக விரைவில் நாட்டைத் திறக்கவேண்டும். திறந்தால்தான் மக்களுடைய வாழ்வாதாரமும், பொருளாதாரமும் உயர்வடையும்.

அரசாங்கம் சில இடங்களை தனிமைப்படுத்தினால் மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதுடன், அவர்கள் தெளிவடைய வேண்டும். கொரோனா தொற்று அதிகரிக்க



தாங்கள்தான் பொறுப்பாளி என்பதை உணரவேண்டும். சுகாதார நடைமுறையைப் பேணாமல் வீதியோரங்களில் சுற்றி அலைந்தால் கொரோனா தொற்று பரவலைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஆகவே, பொதுமக்களும் தங்களுடைய பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும், முயற்சி எடுக்காத பட்சத்தில் நாங்கள் இந்த வீழ்ச்சியிலிருந்து மீள முடியாத ஒருநிலை உருவாகத்தான் வாய்ப்புள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மேலும் தெரிவித்துள்ளார்.

# சமுர்த்தி வங்கியின் வாழ்வாதார கடன்கள் வழங்கும் நிகழ்வு




(நூருல் ஹுதா உமர்)

சௌபாக்கியா சமுர்த்தி வாரத்தினை முன்னிட்டு, சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக, சமுர்த்தி வங்கியினால் வாழ்வாதார கடன்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், கல்முனை பிரதேச மின் பொறியியலாளர் ஏ.எம்.ஹைகல், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், சமுர்த்தி முகாமையாளர்களான எஸ்.றிபாயா உள்ளிட்டோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்குக் கடன்களை வழங்கி வைத்தனர்.

கிழக்கு செய்திகள் easttamilan@gmail.com

# ஒரு மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் அக்கரைப்பற்று வைத்தியசாலை வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்



(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணசபையின் ஒரு மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் அக்கரைப்பற்று வைத்தியசாலை வீதி புனரமைப்பு வேலைத்திட்டம் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.ராஸிக் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அக்கரைப்பற்று பிரதேச சபை, ஆயுர்வேத மருந்தகம், சமுர்த்தி அபிவிருத்தி வங்கி, முஹம்மதியா மருந்தகம், ஆயுர்வேத வைத்தியசாலை உட்பட முக்கிய அரச நிறுவனங்களை ஊடறுத்துச் செல்லும் இவ்வீதியானது பிரதேசத்தின் முக்கிய வீதிகளில் ஒன்றாக கருதப்படுகிறது. அக்கரைப்பற்று பிரதேச சபை உதவித் தவிசாளர் ஏ.எம். அஸ்ஹர், உறுப்பினர்களான ஏ.ஜி.பர்சாத், ரீ.எம். ஐயூப், மௌலவி எச்.ஐ.எல். சஹாப்தீன், செயலாளர் எம்.எல்.இர்பான், கால்நடை வைத்திய அதிகாரி டொக்டர் றிப்கான், பிராந்திய ஆயுர்வேத வைத்திய அதிகாரி டொக்டர் நபீல், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.சுசாந்தன், முஹம்மதியா வைத்தியசாலை வைத்திய அதிகாரி டொக்டர் அன்வர், பள்ளிக்குடியிருப்பு உப தபால் அதிபர் யூ.எல்.நவாஸ் ஆகியோரால் கல் வைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

# சௌபாக்கியா வாரத்தில் கல்முனையில் சமுர்த்தி குடும்பங்களுக்கு இலவச மின்சார இணைப்பு

*(எம். என். எம். அப்ராஸ்)*

சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு இலவச மின்சார இணைப்பு கல்முனையில் வழங்கிவைக்கப்பட்டது.

இதற்கமைய கல்முனை 12, 13, 14 ஆம் பிரிவுகளிலுள்ள சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பில் மின்சார இணைப்பு பயனாளர்களின் வீடுகளுக்கு நேரடியாக கையளிக்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தலைமையில் நேற்று (07) இடம்பெற்றது.

குறித்த மூன்று பிரிவுகளிலுள்ள 08 சமுர்த்தி குடும்பங்களுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச சமுர்த்தி சிரேஷ்ட கருத்திட்ட முகாமையாளர் எம்.எஸ்.நயிமா உட்பட சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் எஸ்.எல்.அசீஸ், பிரதேச கருத்திட்ட உதவியாளர் எ.எஸ்.எம்.ஜவ்பர், சமுர்த்தி உத்தியோத்தர்களான எஸ்.எம்.சம்சுதீன், எஸ்.எச்.பதூத், எம்.ஜெமில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் தெரிவுசெய்யப்பட்ட 72 சமுர்த்தி பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கிவைப்பு

(கே.ஏ.ஹமிட்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக எல்லைக்குள் தெரிவுசெய்யப்பட்ட 72 சமுர்த்தி பயனாளிகளுக்கு வளர்ப்பு ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் ஷாபிர் தலைமையில் இதற்கான பிரதான நிகழ்வு ஒலுவில் அஷ்ரப் நகரில் நடைபெற்றது. சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வளர்ப்பு ஆடு வீதம் 72 பயனாளிகளுக்கும் 72 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு அஷ்ரப் நகர், சௌபாக்யா உற்பத்தி கிராமமாக தெரிவுசெய்யப்பட்டதுடன், அதிதிகளினால் திறந்தும் வைக்கப்பட்டது. இங்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியில் கட்டப்பட்ட ஒரு வீட்டினையும் திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹ்மட் நஸீல், இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்கவின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி சுபுன் திசாநாயக்க, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுஸைனுடீன், நிர்வாக உத்தியோகத்தர், எம்.எம்.நளீல், நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்கவின் இணைப்பாளர் எஸ்.எம்.ஜெஸீல், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லா மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்றில் மூன்று கிராமசேவகர் பிரிவுகள் சௌபாக்கியா திட்டத்தின் உற்பத்திக் கிராமங்களாகத் தெரிவு



(பாலமுனை நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உருவான பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் அடிப்படையில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஆலிம் சேனை, இசங்கனிச்சீமை, பள்ளிக்குடியிருப்பு 2ஆம் பிரிவு ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகள் சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சௌபாக்கியா திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள மேற்படி மூன்று கிராமசேவகர் பிரிவுகளிலும் சௌபாக்கியா வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அக்ஷெய்க் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் (நழீமி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.ராசிக், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளர் ஏ.எம்.நிஹால், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.பஜீருடீன், ஆலிம் நகர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல்.தையூப், பள்ளிக்குடியிருப்பு 2ஆம் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.தம்ஜித், இஸங்கணிச்சீமை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எம்.இர்பான், கிராம உத்தியோகத்தர் ஏ.எம்.சியாத், சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.ஏ.மஜீத், கால்நடை வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.றிப்கான், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஏ.சியான் உட்பட பள்ளிவாசல் தலைவர்கள் பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது குறித்த திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட மூன்று கிராமசேவகர் பிரிவுகளிலிருந்தும் முதல்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்படவுள்ளதுடன், ஆடு வளர்ப்பு தொடர்பான விளக்கமும் அவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இனக்கலவரத்தை உண்டாக்கி அரசியல் ஆதாயம் தேட முனைபவர்களின் நாடகமே இந்த காணி அபகரிப்பு

## கல்முனை – 01 கிராமசேவகர் டீ.ஆர்.அலாவுதீன்

(நூருல் ஹுதா உமர்)

இனக்கலவரத்தை உண்டாக்கி அரசியல் ஆதாயம் தேட முனைபவர்களின் நாடகமே இந்த காணி அபகரிப்பு விடயமாகும். ஆங்கிலேயர் காலத்தின் வரைபடம் முதல் எனது (தனிநபர்) காணிதான் என்பதை நிரூபிக்கும் உறுதிகள் வரை சர்ச்சைக்குள்ளாகியுள்ள காணி விடயத்தில் உள்ளன என சுலைமா லெப்பை ஹமீட் தெரிவித்தார்.

கல்முனை உப பிரதேச செயலக கிராம நிலதாரியை தாக்கியதாக கடந்த வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டங்களும், வழக்கு தாக்குதல்களும், ஊடக செய்திகளுமாக இருக்கும் கல்முனை இஸ்லாமாபாத் காணி விடயம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் (06) மாலை கலந்துகொண்டு பேசும்போதே சர்ச்சைக்குள்ளாகியுள்ள காணி உரிமையாளரான சுலைமா லெப்பை ஹமீட் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், குறித்த நபருக்கும் எனக்கும் இடையில் சம்பாஷணை நடந்து கொண்டிருந்தபோது வீதியால் சென்றவர் அவரைத் தாக்கியதாக பொய்யான குற்றசாட்டை முன்வைத்து, கல்முனை பொலிஸில் முறைப்பாடுசெய்து வலது குறைந்த அந்த சகோதரரை 24 மணித்தியாலயங்களுக்கு மேலாக கம்பி கூட்டுக்குள் வைத்துள்ளார்கள். இது அநியாயமான ஒன்றாகும். தகவலறியும் சட்டம் முதல் இலங்கை அரசின் சகல வழிகளிலும் என்னுடைய காணிதான் அந்தக் காணி என்பதற்கான சகல ஆதாரங்களையும் வைத்துள்ளேன். சமூக செயற்பாடுகளில் முன்நிற்கும் என்னுடைய ஆளுமையை கேள்விக்குட்படுத்தி என்னை முடக்கும் விதமாகவே இந்த போலியான குற்றசாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.



இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த காணி அமைந்திருக்கும் கல்முனை - 01க்கு பொறுப்பான கிராமசேவக பிரிவின் அதிகாரி டீ .ஆர்.அலாவுதீன், வாடிவீட்டு வீதி, வயல், கடல், கல்முனை நகர் போன்றவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இஸ்லாமாபாத், கல்முனை நகர் போன்ற பிரிவுகளுக்கு கிராம நிலதாரியாக இருக்கும் எனக்கு எனது பிரிவைப் பற்றி நன்றாக தெரியும். 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் ஒன்றாக இருந்த கல்முனை பிரதேச செயலகம் பின்னாட்களில் சில நபர்களினால் மற்றுமொரு உப அலுவலகம் உருவாக்கப்பட்டதிலிருந்து பிரச்சினைகள் நீண்டுகொண்டே இருக்கின்றன.

காலத்திற்கு காலம் வேறு பெயர்களைக் கொண்டு அழைத்தாலும், சரியான எல்லைகளோ அல்லது நிர்வாக முறைகளோ இல்லாத கல்முனை உப பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள கல்முனை 1சீ கிராம சேவகர் முறைகேடாக அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார். சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸில் நடவடிக்கைக்காக முறைப்பாடு செய்துள்ளேன். இது முதல் தடவையல்ல. கடந்த காலங்களிலும் வாடி வீட்டு வீதியிலுள்ள தனிநபர் 13 பேருக்கு சொந்தமான காணிகளில் மாகாண காணி ஆணையாளரின் அனுமதியில்லாமல் அரச காணி அறிவித்தலை காட்சிப்படுத்தினார்கள். அந்த வழக்கும் இப்போது வரை விசாரணைக்காக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனது பிரதேச முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவர் நானே. வேறு பிரிவு கிராமசேவகர் அல்ல.

குறித்த காணி தொடர்பில் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளோம். தனியார் காணி என்பதற்கான ஆதாரங்கள் இருக்கிறது. ஆனால், அரச காணி என்பதற்கான ஆதாரம் இருக்கிறதா? அரசியல் ஆதாயம் தேட அரசியல்வாதிகள் போடும் நாடகங்களே இவை. எங்கள் பிரதேச சகோதரர்கள் இஸ்லாமிய வழியில் பொறுமையாக இருந்து இனக்கலவரமொன்றை தடுத்துள்ளார்கள் என்றார்.

இங்கு கருத்து தெரிவித்த இஸ்லாமாபாத் முக்கியஸ்தரான எஸ்.எம்.அபூபக்கர், கல்முனை மாநகர சபை உறுப்பினரான சந்திரசேகரம் ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன், சில இனவாத நோக்கம் கொண்ட நிருபர்கள் எனப் பலரும் அத்துமீறி எங்களுக்கு சொந்தமான காணிக்குள் தங்களின் காணி என கூறிக்கொண்டு அட்டூழியம் செய்துள்ளார்கள். முழுமையாக அரசியலை நோக்காகக் கொண்டே இந்த காரியங்கள் நடக்கின்றன. கல்முனை பிரதேச செயலக இழுபறிநிலை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இல்லாது போனால் எதிர்வரும் காலங்களில் ஒற்றுமையாக வாழும் தமிழ்-முஸ்லிம் சமூகம் மனம் நோகும் நிலை வரும். இது தொடர்பில் அரசாங்கம் கவனம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்துக்கு 45,674 மில்லியன் ரூபா நட்டம்; 3 மாதங்களுக்கான வர்த்தக திட்டங்களை சமர்ப்பிக்குமாறு கோப் குழு பணிப்பு






வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டுவரும் பூரண வர்த்தக திட்டமொன்றை தயாரித்து ஒரு மாத காலத்துக்குள் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் தலைவர் அஷோக் பத்திரகேவுக்கு நேற்று முன்தினம் அறிவித்தார்.

அதேபோன்று, தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்ந்து ஒரு மாத காலத்துக்குள் அமைச்சு மட்டத்திலும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு, சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு குழு பரிந்துரைத்தது. விசேட குழுவொன்றை நியமித்து பரந்துபட்ட ஆய்வொன்றை மேற்கொண்டு துரிதமாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் குழு அறிவித்தது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை அரசாங்கத்துக்கு கையகப்படுத்திய தினம்முதல் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதிவரையான நட்டம் 3 இலட்சத்து 72 ஆயிரத்து 15 மில்லியன் ரூபா என கோப் குழுவில் புலப்பட்டது.

2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளின் வரிகளின் பின்னர் அந்த நிறுவனத்தின் நட்டம் 45 ஆயிரத்து 674 மில்லியன் ரூபா எனவும், செயற்பாட்டு நட்டமும் அதிகரித்துள்ளதாகவும் கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அதற்கு கொவிட்-19 தொற்று நோயின் தாக்கம், விமானங்களுக்கான எரிபொருள் செலவு, விமானங்களின் செயற்பாட்டு குத்தகை செலவுகள் மற்றும் ஏனைய குத்தகை செலவுகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் அதிகரித்துள்ளமை என்பன தாக்கம் செலுத்தியுள்ளன.

நிறுவனத்தின் சாதகமற்ற மூலதன நிலைமை கடந்த மார்ச் 31ஆம் திகதிவரை ஒரு தீவிர நிலையை அடைந்துள்ளதாகவும், அதனால் திறைசேரியின் உதவியின்றி நிறுவனத்தின் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுவது தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு இந்தக் கூட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததுடன், இக்கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான அஜித் நிவாட் கப்ரால், ரி.வி.சானக, இந்திக அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, எரான் விக்கிரமரத்ன, ஹர்ஷ டி. சில்வா, எஸ்.எம்.மரிக்கார், ஜகத் புஷ்பகுமார, ஜயந்த சமரவீர, பிரேம்நாத் சி. தொலவத்த, எஸ்.இராசமாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2021ஆம் ஆண்டில் திறைசேரியினால் 500 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக மூலதனமாக இடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் 240 மில்லியன் அமெரிக்க டொலர் இதுவரை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் குழுவில் புலப்பட்டது. அந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பிலும் குழு விசேட கவனம் செலுத்தியது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் கடந்த மார்ச் 31ஆம் திகதி சேவையிலிருந்த உயர் முகாமைத்துவ அதிகாரி ஒருவர் 3.1 மில்லியன் ரூபா மாதாந்த சம்பளத்தையும், 82 விமானிகள் 02 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான மாதாந்த சம்பளத்தையும், மேலும் 142 விமானிகள், 12 விமான பொறியியலாளர்கள், பொறியியல் பிரிவின் 09 முகாமையாளர்கள் மற்றும் உயர் முகாமைத்துவ 03 அதிகாரிகள் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் 02 மில்லியன் ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதாந்த சம்பளம் பெறுவதாகவும் குழுவில் புலப்பட்டது.

இந்தச் சேவையை தேசிய சேவையொன்றாக செயற்படுத்தும் அவசியம் தொடர்பிலும் குழுவின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார். அதேபோன்று, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தினசரி நட்டம் 84 மில்லியன் ரூபா என குழுவில் புலப்பட்டதுடன், அந்தளவு அரச நிதியை செலவுசெய்யும் இந்த நிறுவனத்தை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கான முறையான திட்டமொன்று தேவை எனவும் குழு சுட்டிக்காட்டியது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 2019/20 மற்றும் 2020/21 ஆகிய ஆண்டுகளில் அதன் செலவுகளை 66.9 மில்லியன் அமெரிக்க டொலர் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் குழு இதன்போது நிறுவனத்தை பாராட்டியது.

# 75 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்





பாணந்துறை, பிங்வத்த பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேடுதலின் போது 750 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 43 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்த தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி 75 இலட்சம் ரூபா என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேகநபர் சலிந்து என்ற போதைப்பொருள் விற்பனையாளரின் உதவியாளர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் 7 நாட்களுக்கு தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் போதைப் பொருளை கொண்டுசென்ற குற்றச்சாட்டில் கைதான உப பொலிஸ் பரிசோதகருக்கும் இந்த போதைப் பொருள் தொகைக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொச்சிலன் கடற்கரை பகுதியில் 97 கிலோ கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# குருநாகல் மாவட்டத்தில் 03 பாடசாலைகள் தேசிய கல்லூரிகளாக தரமுயர்த்த நடவடிக்கை

(இக்பால் அலி)

பொல்கஹவெல அல் இர்பான் மத்திய கல்லூரியை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் - என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் தெரிவித்தார்.

பொல்கஹவெல அல்-இர்பான் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி தொடர்பிலான கூட்டம் அதிபர் ஏ. எச்.எம்.பசார் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இம்முறை குருநாகல் மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக மூன்று பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. எனினும், இப்பாடசாலையின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சரிடம் இப்பாடசாலையின் குறைபாடுகளை எடுத்துக் கூறி தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அங்கு அவர் மேலும் தெரிவித்தாh.





இந்நிகழ்வில் பொல்கஹவெல பிரதேச சபை உறுப்பினர் நஜீலா, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் முதலிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். கொரோனா தொற்று தொடர்பிலான சுகாதார வழிமுறைகளைப் பேணி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியைப் பேணி இந்தக் கூட்டம் இடம்பெற்றது.





**சௌபாக்கியா வார வேலைத்திட்டத்தின் ஓர் அம்சமாக, வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/213 மல்லாகம் கிராமத்தில் கட்டப்பட்ட புதிய வீடு, பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். (படங்கள் - சாவகச்சேரி நிருபர் )**







**வேலைநிறுத்தம் செய்த சகல சேவையாளர்களையும் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரி ஒன்றிணைந்த பொறியியலாளர் கூட்டுத்தாபன சேவையாளர் சங்கத்தினரால் நேற்று அரச பொறியிலாளர் கூட்டுத்தாபனத்தின் பிரதான காரியாலயத்தின் முன்னிலையில் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)**

# தெதுருஓயா பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் முச்சக்கரவண்டி மீட்பு

**அதன் உரிமையாளர் நீராடச் சென்று விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம்.**

(ஜூட் சமந்த)

சிலாபம், தெதுருஓயா பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த முச்சக்கரவண்டியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலையிலிருந்து அதே பிரதேசத்தில் குறித்த இடத்திலேயே இருந்ததாக அந்த பிரதேசத்திலுள்ள வியாபார நிலையம் அறிவித்துள்ளது. இந்த முச்சக்கரவண்டியிலிருந்து ஆணொருவரின் ஆடைகள், காலணி என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முச்சக்கரவண்டி மாதம்பை, தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருடையது என்பது அடையாளங்காணப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டியில் வந்துள்ள அதன் உரிமையாளர் தெதுருஓயாவில் நீராடச் சென்றபோது விபத்து ஏற்பட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல்போயுள்ள நபரை தேடி சிலாபம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# தங்கொட்டுவவில் நபரொருவரின் சடலம் மீட்பு

(ஜூட் சமந்த)

தங்கொட்டுவ, தும்மலகொட்டுவ பிரதேசத்தின் ஏரி பகுதியிலிருந்து அடையாளந்தெரியாத நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இவர் உயிரிழந்திருக்கலாமென நம்புவதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபரின் சடலம் அடையாளம் தெரியாதளவுக்கு சேதமடைந்துள்ளதுடன், உடலின் ஒருபகுதி அழுகிய நிலையில் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பான அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உயிரிழந்தவரின் உடல் தங்கொட்டுவ மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாந்தை மேற்கில் ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படாத அரச காணிகளை பணக்காரர்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை

## சன்னார் கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றச்சாட்டு

(மன்னார் நகர் நிருபர்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரியமடு மற்றும் சன்னார் பகுதிகளில் ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படாத அரச காணிகள் பணக்காரர்கள் சிலருக்கு வழங்கப்படுவதாக சன்னார் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



இவ்விடயம் தொடர்பாக நேற்று புதன்கிழமை காலை 10 மணியளவில் மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது சன்னார் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ராமசாமி ஜெயரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்றுவரை பெரியமடு, சன்னார் கிராமத்திலேயே நாங்கள் வாழ்ந்து வருகின்றோம்.

நாம் வசிக்கும் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் அரச காணிகள் இருந்தபோதும் எமக்கான அரை ஏக்கர் விவசாயக் காணிகள் கூட இல்லை. வாழ்வாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இங்கு ஏழை விவசாயிகளுக்கு சொந்தமான அரச காணிகளை சில அரச அதிகாரிகளோடு சேர்ந்து வசதி படைத்தவர்களும் அபகரித்து வருகின்றனர்.

இந்தச் செயற்பாட்டுக்கு சில அரச அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாக இருக்கின்றது.

எமது கிராம பகுதியில் 2011ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்த பின்னர் வடக்கு காணி ஆணையாளர் ஊடாக எமது பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்தோம்.

அதற்கு எமக்கு எந்தவொரு பலனும் கிடைக்கவில்லை. காரணம், அங்குள்ள பணக்காரர்களுக்கு முன் ஒருசில அரச அதிகாரிகள் நிற்கின்றார்கள்.

அந்த அரச அதிகாரிகளால் எங்களுடைய வாழ்வாதாரமும் பிள்ளைகளின் கல்வியும் சீரழிந்துகொண்டிருக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட பதியுதீன் அமைச்சராக இருந்தபோது சன்னார் பகுதியில் பல ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை அழித்து அங்கு வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், மருத்துவமனை போன்றவை கட்டிக்கொடுக்கப்பட்டன.

கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள், கட்டடங்களில் இன்று மக்கள் குடியிருப்பு இல்லாமல் ஆடு, மாடுகள், காட்டு விலங்குகள் தங்கும் இடங்களாக மாறியுள்ளன. ஆனால், நீண்டகாலமாக அப்பகுதியில் வசித்துவரும் எமது வாழ்வாதாரத்திற்கும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் அரை ஏக்கர் விவசாய காணி தருமாறு நாங்கள் கெஞ்சி கேட்டபோதும் அரச அதிகாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

காரணம், அங்குள்ள ஒருசில பணக்காரர்களுக்கு காணி உறுதிகள் இருப்பதாக அரச அதிகாரிகளே கூறுகின்றார்கள். தொடர்ச்சியாக இந்தக் காணிகளிலிருந்து எம்மை விரட்டி அடிப்பதிலேயே பலர் குறியாக செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

அதில் குறித்த காணிகள் அபகரிப்பு செய்துகொண்டிருக்கும் சில பணக்காரர்களுக்கு ஆதரவாக ஒரு சட்டத்தரணி எம்மை அணுகி 15 இலட்சம் ரூபா தருவதாகவும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராக இருப்பவர் ஒரு மாதம் பதவி விலக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், அந்த அரச காணிகள் முழுவதும் ஏழை விவசாயிகளுக்கு சேரவேண்டியவை. எமது ஏழை விவசாயிகளுக்காக இன்று ஊடகத்தை சந்தித்து அனைத்து விடயங்களையும் தெரிவித்திருக்கும் இந்த நேரத்தில் எமது உயிருக்கும் உடைமைகளுக்கும் அச்சுறுத்தல் உள்ளது என்பதனையும் இங்கு நான் குறிப்பிடுகின்றேன்.

பெரியமடு,சன்னார் பகுதியில் அரச காரணிகளாக இருக்கும் அனைத்தையும் அங்குள்ள ஏழை குடும்பங்களுக்கு அரை ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்க வேண்டும் - என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் சன்னார் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# தமிழ் – ஆங்கில மொழிபெயர்ப்பாளராக றெபேக்கா மிராண்டா சத்தியப்பிரமாணம்



(மன்னார் நகர் நிருபர்)

மனிதநேய பல அமைப்புகளின் ஆலோசகரான மன்னார் பேசாலையைச் சேர்ந்த திருமதி ஏ.இ.றெபேக்கா மிராண்டா அண்மையில் மன்னார் நீதவான் முன்னிலையில் தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

இவர் யு.என். நிறுவனங்களில் 10 வருடங்களுக்கு மேலாகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் ஆங்கில மொழிமூலம் இளமாணி பட்டத்தை வேதியியலிலும், (BSC) முதுமாணி பட்டத்தை மனித அபிவிருத்தித் துறையிலும் (MSC) மற்றும் முதுகலைப் பட்டத்தை சமூக சேவைகள் துறையிலும் (MSW) பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு இரத்தமாற்று இயந்திரம் கையளிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப ஆரோக்கியமான நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவில் உருவாகி, நாடளாவிய ரீதியாக செயற்படுத்தப்பட்டுவரும் 'ஜன சுவய' திட்டத்தின் 20ஆவது கட்டமாக மன்னார் பொது வைத்தியசாலைக்கு 23 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா (23,20,000.00) மதிப்புள்ள இரத்தமாற்று இயந்திரம் எதிர்க்கட்சி அலுவலகத்தில் வைத்து மன்னார் மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் கே.செந்தூர் பதிராஜாவிடம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட துணைத் தலைவர் ராஜித சேனரத்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், சாணக்கியன் இராசமாணிக்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்துகொண்டு எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

# வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபார்ம் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றிவைப்பு







(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 60 வயதிற்கு மேற்பட்ட 1000 பேருக்கு முதல் கட்டமாக சினோபார்ம் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

வவுனியா, காமினி மகாவித்தியாலத்தில் நேற்றுக் காலைமுதல் குறித்த தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை இராணுவத்தினராலும், சுகாதாரப் பிரிவினராலும் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவு, இறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவு, வவுனியா நகரின் வடக்கு கிராம அலுவலர் பகுதி, வைரவபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவு என்பவற்றைச் சேர்ந்த 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே இவ்வாறு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

இதன்போது, அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆர்வத்துடன் வருகை தந்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், இராணுவ அதிகாரிகள், வைத்தியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அக்கராயன் வைத்தியசாலையின் உணவு வழங்கலில் முறைகேடு

## கவனம் செலுத்துமாறு பாதிக்கப்பட்ட தரப்பு கோரிக்கை

அக்கராயன் வைத்தியசாலைக்கான உணவு வழங்கல் ஒப்பந்தம் நிறைவு காலத்திற்கு முன்னர் நிறுத்தப்பட்டு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளதோடு, இது தொடர்பில் உயரதிகாரிகள் கவனம் செலுத்தி நியாயத்தை பெற்றுத் தருமாறும் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு உணவு வழங்கும்ஒப்பந்தம் நிறைவுக்குவரும் காலம் ஆறு மாதங்கள் உள்ள நிலையில் எவ்விதமானஎழுத்துமூலமான அறிவித்தலுமின்றி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நிறுத்தி முறைகேடான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அக்கராயன்குளம் வைத்தியசாலையின் நோயாளர்களுக்கும், பணியாளர்களுக்குமான சமைத்த உணவு வழங்கும் ஒப்பந்தம் கடந்த 2020.05.01 தொடக்கம் 2021.04.30வரையான ஒரு வருடக் காலத்திற்கு இரண்டு இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவுக்குஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.ஒப்பந்தத்தைப் பெற்ற காலத்திலிருந்து நேர்த்தியாக, நடைமுறைகளுக்கு அமைவாகசமைத்த உணவு வழங்கலை அவர் மேற்கொண்டு வந்த நிலையில், எவ்வித காரணங்களுமின்றி கடந்த 2020.11.04 அன்று தாதிய உத்தியோகத்தர் ஒருவர் ஊடாக வாய்மொழி அறிவித்தல் மூலம் அவரது ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு குறித்த நபர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஒப்பந்தக் காலம் நிறைவுறுவதற்கு ஆறு மாதங்கள் உள்ளபோதும் முன்னர் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டமைக்கு இதுவரை எழுத்துமூலமான அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே, இது தொடர்பில் அக்கராயன்குளம் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ராகுலனை தொடர்புகொண்டு வினவியபோது, கிளிநொச்சி கிருஸ்ணபுரம் தொற்றுநோய் வைத்தியசாலைக்கு உணவு வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டபோது இவரது ஒப்பந்தம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நிறுத்தப்பட்டது. கிருஸ்ணபுரம் வைத்திசாலைக்கான

உணவு வழங்கலுக்கு எமது வைத்தியசாலையின் சமையலறை பயன்படுத்தப்படுவதற்குஎடுக்கப்பட்டமையால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் பொறுப்பு வைத்தியஅதிகாரி என்ற வகையில் நான் தொடர்புகொண்டு என்னிடம் உத்தியோகபூர்வமாக யாரேனும் ஒப்பந்தக் காலம் நிறைவடைவதற்குள் ஏன் உணவு வழங்கல் ஒப்பந்தம்

நிறுத்தப்பட்டது என வினவினால் எழுத்துமூலம் அறிவித்தல் எதுவுமின்றி எவ்வாறு பதிலளிப்பது எனக் கேட்டிருந்தேன். அதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அவ்வாறு யாரோனும் வினவினால் தன்னிடம் அனுப்பிவிடுமாறு

தெரிவித்தார் என அக்கராயன் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ராகுலன் தெரிவித்தார்.

# சுகாதார விதிமுறையை மீறி பொலிஸ் உத்தியோகத்தரின் பதிவுத் திருமணம்

## 64 பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் பதிவு திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 38 குடும்பங்களை சுகாதார பிரிவினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள ஜே - 276 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த பதிவு திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்நிலையில், மாப்பிள்ளை தோழனுக்கு (மணமகளின் சகோதரன்) கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில், மணமக்கள் குடும்பத்தினர் உள்ளிட்ட 38 குடும்பங்களில் 56 பேர் அடையாளம் காணப்பட்டு சுகாதார பிரிவினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

பொலிஸாரும் தனிமைப்படுத்தலில்

அதேவேளை, குறித்த திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மணமகனுடன் கடமையாற்றும் 08 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# நூறு பாடசாலை மைதானங்கள் புனரமைக்கும் திட்டத்தில் அத்தியார் இந்துக் கல்லூரி தெரிவு

(சாவகச்சேரி நிருபர்)

விளையாட்டுத்துறைஅமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் நாட்டில் 100 பாடசாலைவிளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் திட்டத்தில் யாழ். கல்விவலயத்துக்குட்பட்ட நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்பு பணிக்காக 32 இலட்சம் ரூபா ஒதுக்கிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமானஅங்கஜன் இராமநாதனின் முன்மொழிவுக்கமைவாக இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது மைதானத்தை சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# மூன்றாம் கட்ட தடுப்பூசிகளை ஆசிரியர்களுக்கு ஏற்ற நடவடிக்கை

## சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

மூன்றாம் கட்டமாக வழங்கப்படும் தடுப்பூசிகளை பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். சுதோகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

இரண்டாம் கட்டமாக தென்மராட்சி பிரதேசத்திற்கு கிடைக்கப்பெற்ற ஆறாயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது. தென்மராட்சி பிரதேசம் அறுபது கிராமசேவகர் பிரிவுகளைக்கொண்ட பரந்த பிரதேசம் என்பதனால் கொடிகாமம், வரணி, சாவகச்சேரி மற்றும் கைதடி ஆகிய நான்கு இடங்களில் வைத்து தடுப்பூசி செலுத்தப்படுகிறது. மக்களும் ஆர்வமாக இம்முறை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அத்துடன், கடந்த காலங்களில் ஒவ்வாமை உள்ளவர்களுக்கு எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்து தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சகல பொதுமக்களும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் அடுத்தகட்டமாக கிடைக்கப்பெறும் தடுப்பூசிகளை பாடசாலை ஆசிரியர்களுக்கு செலுத்தவுள்ளோம். அதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இம்முறை கிடைக்கப்பெற்ற ஆறாயிரம் தடுப்பூசிகளில் மூன்றாம் நாள் வரை மூவாயிரம் தடுப்பூசிகள்



செலுத்தப்பட்டுள்ளன. இன்று முழுவீச்சில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெறுகின்றது – என்றார்.

# ரிஷாட் பதியுதீனின் விடுதலை குறித்து மக்கள் காங்கிரஸின் அரசியல் பீடம் கூடி ஆராய்வு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் பீட கூட்டத்தில், அந்தக் கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீனின் விடுதலை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விசேடமாக ஆராயப்பட்டதாக மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், அரசியல் பீட அங்கத்தவருமான ஏ.ஜெ.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் பீடத்தின் விசேட கலந்துரையாடல், கட்சியின் பிரதித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம்.சஹீட் தலைமையில் நேற்று முன்தினம் (06) இரவு கொழும்பில் இடம்பெற்றிருந்தது. கட்சித்தலைவர் ரிஷாட் பதியுதீனின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணை, இன்றைய தினம் (08) இடம்பெறவிருப்பதால், நீதிமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்து, அடுத்தகட்ட நகர்வுகளை கட்சி மேற்கொள்வது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் சுபைர்தீன், பொருளாளர் ஜௌசைன் பைலா, நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், கட்சியின் சட்டப் பணிப்பாளர் ருஷ்தி ஹபீப் மற்றும் ஏ.ஜெ.எம்.பாயிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் பகுதிநேரப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம்


## அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்பந்த, பகுதிநேர அடிப்படையில் பணியாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றங்களில் தற்சமயம் நிரந்தர நியமனம் பெறாத, 8 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இதுதொடர்பான யோசனையை நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இவர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு பிரதமர் பணிப்புரை வழங்கியுள்ளார். மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி செயற்படும் அரசாங்கம் என்ற ரீதியில் எந்தவொரு சவால் ஏற்பட்டாலும், மக்களுக்காக தீர்மானம் எடுக்க அரசாங்கம் பின்வாங்காது என்றும் தெரிவித்தார்.



# 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்டமாக பைஸர் தடுப்பூசி



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு மாவட்டத்தில் எஸ்ட்ரா செனிக்கா முதலாவது கட்ட தடுப்பூசியைப் பெற்றுக்கெண்ட 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று இரண்டாவது கட்டமாக பைஸர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நேற்று (07) இடம்பெற்றுள்ளது.

மாளிகாவத்தை பி.டி.சிறிசேன விளையாட்டு மைதானத்தில் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையின் வைத்தியர் குணவர்த்தன தலைமையிலான வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறுவதற்காக காலையிலிருந்தே பெருமளவானோர் நீண்ட வரிசைகளில் காத்திருந்து பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மீன்பிடிக்கச் சென்ற இருவரது சடலங்கள் மீட்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற இருவர் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். வீரகெட்டிய கஜநாயகபுர பிரதேசத்திலுள்ள போகமுவ குளத்திலிருந்தே இவர்களது சடலங்கள் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் மீட்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மீன்பிடிக்கும் தூண்டில் மற்றும் உபகரணங்களுடன் நேற்று முன்தினம் மேற்படி குளத்துக்குச் சென்ற 30 மற்றும் 35 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் பெய்த இடியுடன் கூடிய மழையின் காரணமாக, ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் இருவரும் உயிரிழந்திருக்கலாம் என்றும் வைத்தியர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

# நோர்வே தூதரகத்தின் பிரதான அலுவலகம் புதிய முகவரிக்கு இடமாற்றம்



புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு-7 எனும் முகவரியில் இயங்கி வந்த நோர்வே தூதரகம் கொழும்பு-2 இல் அமைந்துள்ள அலுவலகத் தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், தூதரகத்தின் அலுவலகம் 5ஆம் மாடி, எம்2எம் கட்டடம், இல-34, டபிள்யூ.ஏ.டி.ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-2 எனும் முகவரியில் இயங்கும் என்றும், தற்போதைய கொவிட்-19 தொற்றுப் பரவலுடனான சூழ்நிலை காரணமாக, தூதரகத்தின் ஏதேனும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, முன்பதிவை மேற்கொள்வது அவசியமாகும் என்றும் அந்தத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரகத்தின் வழமையான தொலைபேசி இலக்கமான + 94 115 608 700 அல்லது மின்னஞ்சல் முகவரிகளான emb.colombo@mfa.no அல்லது consular.colombo@mfa.no ஊடாகவும் தொடர்பு கொள்ளலாம்.



தூதரகத்தின் பொறுப்பதிகாரி ஹல்டே பேர்க்-ஹன்சென், புதிய வளாகத்துக்கு விளக்கேற்றி வைத்து தூதரகப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

# ஸ்லோவேனிய ஜனாதிபதியின் இலங்கை விஜயம்! தூதுவர் மஜிந்த ஜயசிங்கவின் பதவியேற்பு நிகழ்வில் ஆராய்வு



ஸ்லோவேனியாவிற்கான இலங்கையின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மஜிந்த ஜயசிங்க தனது நற்சான்றுகளை ஸ்லோவேனியா குடியரசின் ஜனாதிபதி போருட் பஹோரிடம் லுப்லஜானாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து கடந்த 29ஆம் திகதி கையளித்தார்.

ஸ்லோவேனிய ஆயுதப்படைகளின் மரியாதை அணிவகுப்புடன் ஆரம்பமாகிய இந்த வைபவத்தைத் தொடர்ந்து நற்சான்றுகள் கைளிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி போருட் பஹோருடனான மரியாதை நிமித்தமான சந்திப்பும் இடம்பெற்றது. தூதரகத்தின் ஆலோசகரும் சான்சரி தலைவருமான சரித்த வீரசிங்க மற்றும் ஸ்லோவேனியாவிற்கான இலங்கையின் தூதுவரான அண்ட்ரேஜ் பிரீபில் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஸ்லோவேனிய ஜனாதிபதி போருட் பஹோர் மற்றும் ஸ்லோவேனிய மக்களுக்கு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கை மக்களின் வாழ்த்துகளை தூதுவர் மஜிந்த ஜயசிங்க வெளிப்படுத்தினார். ஸ்லோவேனிய அரசின் 30ஆவது ஆண்டுவிழா மற்றும் கடந்த முதலாம் திகதி ஐரோப்பிய கவுன்சிலின் தலைமைப் பதவிக்கு ஸ்லோவேனியா நியமிக்கப்பட்டமையை தூதுவர் பாராட்டினார். ஜனாதிபதி போருட் இலங்கை ஜனாதிபதிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்துவதற்கான தனது ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார்.

கொவிட்-19 வைரஸ் தொற்றினால் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஸ்லோவேனிய ஜனாதிபதியிடம் விளக்கியதுடன், தடுப்பூசிகளின் சமமான விநியோகப் பகிர்விற்கான நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

இலங்கை - ஸ்லோவேனிய உறவுகள் பரஸ்பர நன்மைகளுடன் கூடிய பல பகுதிகளை உள்ளடக்கி அதிவேகமாக வளர்ச்சியடைந்துள்ளதாக தூதுவர் குறிப்பிட்டார். பொருளாதாரம், வர்த்தகம், முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறைகளில் நட்புறவுகளை மேலும் பலப்படுத்தவும், விரிவுபடுத்தவும் இலங்கை நம்புவதாக மேலும் குறிப்பிட்டார். இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி போருட் பஹோருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சார்பாக இலங்கைத் தூதுவர் அழைப்பு விடுத்தார். ஸ்லோவேனிய ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார்.

நற்சான்றுகளை கையளித்தமையைத் தொடர்ந்து, ஸ்லோவேனியாவின் பிரதமர் சார்பில் இராஜாங்க செயலாளர் கலாநிதி இகோர் செங்கார், வெளியுறவு அமைச்சின் இராஜாங்க செயலாளர் கலாநிதி ஸ்டேனிஸ்லாவ் ராஸ்கன், வெளியுறவு அமைச்சின் ஆசியா மற்றும் ஓசியானியா திணைக்களத்தின் தலைவர் போஜன் பெர்டன்செல்ஜ், வெளியுறவு அமைச்சின் பன்முக விவகாரங்கள் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான இயக்குநரகத்தின் பணிப்பாளர் நாயகம் இகோர் ஜுகிக் ஆகியோருடன் தூதுவர் மஜிந்த ஜயசிங்க கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

ஸ்லோவேனிய வணிக சபையின் பணிப்பாளர் நாயகம் அலெஸ் கப்டருட்டி மற்றும் ஸ்லோவேனிய சுற்றுலா சபையின் பணிப்பாளர் நாயகம் மஜா பக் ஆகியோருடன் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான புதிய வழிகள் ஆராயப்பட்டன. 1998இல் இலங்கை வெளிநாட்டு சேவையில் இணைந்த தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஒஸ்ட்ரியாவில் நியமனம் பெறுவதற்கு முன்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தூதுவராகப் பணியாற்றினார். தனது இராஜதந்திர தொழில் வாழ்க்கையில், மக்கள் சீனக் குடியரசின் ஷாங்காயில் துணைத் தூதுவராகவும், மலேசியாவில் பிரதி உயர் ஸ்தானிகராகவும் பணியாற்றியுள்ளார்.

தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஐக்கிய இராச்சியத்தின் பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவராவதுடன், இலங்கையிலுள்ள புனித ஜோசப் கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

# மாத்தளையில் ஏழு உதவி பிரதேச செயலாளர்களுக்கான பதவிகள் வெற்றிடம்

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்தில் ஏழு பிரதேச செயலகங்களில் மொத்தம் ஏழு உதவி பிரதேச செயலாளர்கள் பதவி வெற்றிடங்கள் இருப்பதாகவும், அவை இதுவரை நிரப்பப்படவில்லை எனவும் மாத்தளை மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

மாத்தளை மாவட்டத்திற்கு அரசினால் அங்கிகரீக்கப்பட்ட 12 உதவி பிரதேச செயலாளர்கள் இருக்க வேண்டிய நிலையில், தற்போதுல் ஏழு உதவி பிரதேச செயலாளர்கள் மாத்திரமே பணிபுரிவதாகவும் மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல, லக்கல, அம்பங்கங்க கோரளை, வில்கமுவ தம்புள்ளை, யட்டவத்தை, உக்குவளை ஆகிய பிரதேச செயலகங்களில் மேற்படி வெற்றிடங்கள் காணப்படுவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் இருக்கும் 545 கிராமசேவையாளர் பிரிவுகளில் மொத்த 78 கிராமசேவையாளர்கள் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனடிப்படையில் இறத்தோட்டை பிரதேச செயலகப்பிரிவில் பத்து வெற்றிடங்களும், மாத்தளை பிரதேச செயலகப் பிரிவில் 05 வெற்றிடங்களும், நாவுல பிரதேச செயலகப்பிரிவில் 12 வெற்றிடங்களும், லக்கல பிரதேச செயலகப்பிரிவில் 08 வெற்றிடங்களும், அம்பங்கங்கை பிரதேச செயலகப்பிரிவில் 04 வெற்றிடங்களும், வில்கமுவ பிரதேச செயலகப்பிரிவில் 05 வெற்றிடங்களும், யட்டவத்த பிரதேச செயலகப்பிரிவில் 06 வெற்றிடங்களும், கலேவல பிரதேச செயலகப்பிரிவில் 07 வெற்றிடங்களும், உக்குவளை பிரதேச செயலகப்பிரிவில் 09 வெற்றிடங்களும், தம்புள்ளை பிரதேச செயலகப்பிரிவில் 08 வெற்றிடங்களும், பல்லேபொல பிரதேச செயலகப்பிரிவில் 04 வெற்றிடங்களும் காணப் படுகின்றன.

# குருநாகலில் உள்ளக வீதிகள் அபிவிருத்தி

(இக்பால் அலி)

கொரோனாவுக்கு மத்தியிலும் குருநாகல் மாநகர சபையினால் புறநகரங்களிலுள்ள உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

குருநாகல் மாநகரசபையின் நிதியொதுக்கீட்டின் மூலம் குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அசார்தீன் மொய்னுதீனுடைய பரிந்துரைக்கிணங்க, குருநாகல் மாநகர சபைக்குட்பட்ட தெலியாகொன்ன கண்டி-குருநாகல் பிரதான வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுக்கடையின் அருகில் செல்லும் உள்ளக வீதியின் அங்குரார்ப்பண வைபவம் குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அசார்தீன் மொய்னுதீன் தலைமையில் இடம்பெற்றது.

அத்துடன் இவரது பரிந்துரைக்கிணங்க மற்றுமொரு வீதியும், 04 இலட்சம் ரூபா செலவில் குருநாகல் மாநகர சபையின் நிதியொதுக்கீட்டின் மூலம், நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. தெலியாகொன்ன பகுதியில் அமைந்துள்ள ரியால் உள்ளக வீதியே இவ்வாறு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இப்பிரதேச முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





தொடர்ச்சியாக மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் பொது இடங்களை கிருமித் தொற்றுநீக்கம் செய்யும் வேலைத்திட்டம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் புத்தளம் கிளையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சிலாபம் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் காரியாலயம் செஞ்சிலுவைச் சங்கத்தினால் தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. (படங்கள் - ஜூட் சமந்த)

உலக செய்திகள்

# ஜப்பானில் பாரிய மண்சரிவு

# 24 பேரைக் காணவில்லை

## மீட்புப் பணிகள் தீவிரம்: 26 பேர் தெய்வாதீனமாக தப்பினர்



ஜப்பானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரிய மண்சரிவில் சிக்கிய 24 பேரைத் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் தென்மேற்கே 90 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அடாமி நகரில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக கடும் மழை பெய்துவருகிறது. இதன் காரணமாக கடலோரப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த மண்சரிவினால் வீட்டுத்தொகுதிகள் பல்வேறு பகுதிகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. கடலோரப்பகுதி என்பதால் நிலச்சரிவின் பாதிப்பு அதிகமாக இருந்துள்ளது. பல வீடுகள் மண்சரிவில் புதைந்துள்ளன. இதில் புதையுண்ட 26 பேர் வரையில் மீட்கப்பட்டுள்ளனர். நான்கு பேரின் உடல் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. மேலும் 24 பேர் காணாமல்போயுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீட்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள பிரதமர் யோஷிஹைட் சுகா சிறப்புப் படையணி ஒன்றையும் அனுப்பியுள்ளார். பொலிஸார், தீயணைப்புத்துறையினர் மற்றும் ஜப்பானிய இராணுவத்தினரும் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மண்சரிவு ஒரு சுனாமிபோல் இருந்ததாகவும் அது ஒரு பயங்கர இடி போன்ற சத்தத்தை ஏற்படுத்தியதாகவும் மண்சரிவில் சிக்கி பிழைத்தவர் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜப்பானிய பிரதமர் யோஷிஹைட் சுகா தனது இரங்கலைத் தெரிவித்ததோடு, மண்சரிவில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்ற மீட்புப் பணியாளர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருவதாகத் தெரிவித்தார்.



# விடுதலையாகிறார் பிரிட்னி ஸ்பியர்ஸ்

## 13 வருட கால கட்டுப்பாடுகள் நிறைவு

அமெரிக்காவின் பிரபல நடிகை பிரிட்னி ஸ்பியர்ஸை 13 ஆண்டுகளாக கட்டுப்பாட்டில் வைத்திருந்த சட்டத்தரணியை பதவியிலிருந்து விலகுமாறு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்காரணமாக அவர் இனி சுதந்திரமாக செயற்பட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்பியர்ஸின் விடுதலைக்காக சமூக வலைத்தளங்களில் போராடிய இரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் பிரபல பொப் இசை பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ், பாடகி, பாடலாசியர், நடிகை என பன்முகத்தன்மை கொண்ட இவர், தனது பதின்பருவத்திலேயே பொப் இசையில் மிகப் பிரபலமாக அறியப்பட்டார். அவரது பொப் இசை ஆல்பங்கள் வசூலில் சாதனை படைத்தன. இதையடுத்து பொப் இசையின் இளவரசி என பிரிட்னி ஸ்பியர்ஸ் அழைக்கப்பட்டார்.

எந்தளவுக்கு புகழின் உச்சிக்கு சென்றாரோ அதே அளவு சர்ச்சைகளிலும் சிக்கியவர் பிரிட்னி ஸ்பியர்ஸ். அவருடைய முதல் திருமண விவாகரத்தின் பின்னர் கெவின் ஃபெடர்லைன் என்பவரை மணந்தார். இந்தத் தம்பதியினரும் 2007ஆம் ஆண்டு விவகாரத்து பெற்று பிரிந்தனர். தனது குழந்தைகளை பராமரிக்கும் உரிமையும் பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு வழங்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து அவர் கடும் மனஉளைச்சலுக்கு உள்ளானார். இதற்காக மனநலம் மையத்தில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இந்நிலையில், இது தொடர்பான வழக்கின் கடந்த 2008ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் சட்டத்தரணி ஆண்ட்ரூ வாலட் என்பவரின் கட்டுப்பாட்டில் பிரிட்னி ஸ்பியர்ஸ் இருக்க வேண்டும் என உத்தரவிட்டது.

தனது பொருளாதாரம் சார்ந்த, வாழ்க்கை சார்ந்த எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமை பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு மறுக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாகவே தனது வாழ்க்கை குறித்த எந்த முடிவையும் சுயமாக எடுக்க உரிமை இல்லாதவராக பிரிட்னி ஸ்பியர்ஸ் இருந்தார். பிரிட்னி ஸ்பியர்ஸுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த கட்டுப்பாடுகளை திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கை சமீபகாலமாக வலுபெற்றுள்ளது. ட்விட்டரில் பலரும் #FreeBritney என்ற ஹேஷ்டேக்கில் பதிவிட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக லொஸ் ஏஞ்சலில் நீதிமன்றத்தில் பிரிட்னி ஸ்பியர்ஸ் நேரில் ஆஜரானார் அப்போது, 13 ஆண்டுகளாக தனது வாழ்க்கையை நிர்வகிக்கும் "தவறான" பழைமைவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக தான் அனுபவித்துவரும் கட்டுப்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என பிரபல பொப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் நீதிமன்றத்தில் உருக்கமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையிலேயே சட்டத்தரணியை பதவி விலகுமாறு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# ஆப்கானின் முக்கிய நகரங்களை கைப்பற்றிய தலிபான் தீவிரவாதிகள்

ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தங்கள் படைகளை வெளியேற்றும் பணியில் தற்போது அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் முக்கிய நகரங்களை தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் மற்றும் அரச படைகளுக்கு இடையே சுமார் 20 ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகளும் இந்த உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், ஆப்கானிஸ்தான் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா விரும்பியது. இதன் காரணமாக கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்கா- தலிபான்கள் இடையே வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தங்கள் படைகளை வெளியேற்றும் பணியில் தற்போது அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

இதனால் தலிபான்களின் பலம் அதிகரித்துள்ளது. அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படாததால், இரு தரப்புக்கும் இடையே அவ்வப்போது தாக்குதல் நடைபெற்று வருகிறது. தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த பகுதிகளில் அரச படைகள் அண்மையில் வான்வழித் தாக்குதல் நடத்தியதில் 33 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் வடமேற்கு பகுதியில் தஜிகிஸ்தான் நாட்டின் எல்லையையொட்டி அமைந்துள்ள படாக்ஸ்கான் மற்றும் கந்தகார் மாகாணங்களில் உள்ள நகரங்களை தற்போது தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.



# கொரோனாவுடன் வாழ பழகிக்கொள்ளுங்கள்

**- இங்கிலாந்து பிரதமர் ஜோன்சன் தெரிவிப்பு**

கொரோனாவுடன் மக்கள் வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். இங்கிலாந்தில் கொரோனா வைரஸின் டெல்ட்டா வகைப் பரவல் அதிகரித்துள்ளதுடன், தளர்வுகளுக்கு சுகாதாரத்துறை மறுத்துள்ளது.

இந்நிலையில், கொரோனாவுடன் மக்கள் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என பிரதமர் ஜோன்சன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாத்திரம் புதிதாக 24 ஆயிரத்து 248 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், இதுவரை தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை 49 இலட்சத்து 58 ஆயிரத்து 868 ஆக உயர்ந்துள்ளது. அந்நாட்டில் நேற்றுவரை ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 268 பேர் கொரோனாவுக்குப் பலியாகியுள்ளனர். அந்நாட்டில் ஊரடங்கு தளர்வின் ஒரு பகுதியாக முகக்கவசங்களை அணிந்து கொள்வது தனிநபர் சார்ந்த விருப்பம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மருத்துவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






இந்தோனேஷியாவின் மெராபி எரிமலையிலிருந்து குழம்பு வெளியேறத் தொடங்கியுள்ளது. இதன்காரணமாக அப்பகுதியில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.



எத்தியோப்பியாவின் மெக்கெல்லே பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கியிருக்கும் பகுதியொன்றை படத்தில் காண்கிறீர்கள்.




அமெரிக்க சுதந்திர தினத்தில் அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் தனது குடும்ப உறுப்பினர்களுடன் செல்பி எடுக்கும்போது புகைப்படக் கலைஞர் ஒருவரால் எடுக்கப்பட்ட படம் சமூக வலைத்தளங்களில் பிரபலமாகியுள்ளது.



இந்தோனேசியாவில் கொவிட் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளது. இதனால் அந்நாட்டில் ஒட்சிசனுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. ஜகார்த்தாவிலுள்ள வைத்தியசாலையொன்றுக்கு அருகில் ஒட்சிசன் நிரப்பிக்கொள்ள பெருந்திரளானோர் காத்திருந்தனர்.



# சர்வதேச கிரிக்கெட் அரங்கிற்கு விடைகொடுக்கிறார் மெத்யூஸ்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முக்கிய சகலதுறை வீரரான அஞ்சலோ மெத்யூஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவது தொடர்பில் சிந்தித்து வருவதாக இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் கலந்துரையாடி எதிர்வரும் சில வாரங்களில் ஓய்வு தொடர்பான முடிவை அவர் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

34 வயதாகும் சகலதுறை வீரரான அஞ்சலோ மெத்யூஸ் கடந்த 2008ஆம் ஆண்டு சிம்பாப்வே அணியுடன் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச போட்டி மூலமாக இலங்கைக் கிரிக்கெட் அணியில் அறிமுகமானார். பின்னர் டெஸ்ட் மற்றும் இருபதுக்கு 20 என மூவகையான போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி வந்த அவர் இலங்கை அணியின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

உடல் தகுதி பிரச்சினை காரணமாக சில காலங்களாக தொடர்ந்து தேர்வுக்குழுவினால் புறக்கணிக்கப்பட்டு வந்த மெத்யூஸ், கடந்த வருடத்தில் இருந்துதான் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் களமிறங்கினார். இவ்வாறான நிலையில், அணியில் இளம் வீரர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற புதிய தேர்வுக்குழுத் தலைவரின் முயற்சியின் அடிப்படையில் அண்மையில் நடைபெற்றிருந்த இங்கிலாந்து அணியுடனான தொடரில் மூத்த வீரரான அஞ்சலோ மெத்யூஸ் தவறவிடப்பட்டிருந்தார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அஞ்சலோ மெத்யூஸ் விரைவில் ஓய்வு தொடர்பான அறிவிப்பை வெளியிடுவார் என ரசிகர்கள் எதிர்பார்த்திருந்த இவ்வாறானதொரு நிலையில், அவர் ஓய்வு தொடர்பில் சந்திப்பதாக இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார்.




# ஒலிம்பிக்கில் இலங்கை கொடியை ஏந்தவுள்ள சாமர நுவன், மில்கா டி சில்வா

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஜூடோ வீரர் சாமர நுவன் மற்றும் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை மில்கா டி சில்வா ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் இலங்கை கொடியை ஏந்திச் செல்வார்கள் என தேசிய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

32ஆவது கோடைகால ஒலிம்பிக் போட்டியானது எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை ஜப்பானிய தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. இம்முறை ஒலிம்பிக்கில் 206 நாடுகளைச் சேர்ந்த சுமார் 11 ஆயிரம் வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக இலங்கையிலிருந்து 9 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளார்கள். இதில் 5 வீராங்கனைகளும், 4 வீரர்களும் அடங்குகின்றனர்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இலங்கை அணி எதிர்வரும் 15ஆம் திகதி ஜப்பான் நோக்கிப் புறப்படவுள்ளது.




## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# நான்காவது தடவையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்த இத்தாலி



கால்பந்து உலகில் பீபா உலகக்கிண்ணத் தொடருக்கு அடுத்த பெரிய தொடராக கருதப்படுகின்ற 'யூரோ கிண்ணம் 2020' கால்பந்து தொடரின் இறுதிப்போட்டிக்கு ஸ்பெய்ன் அணியை பெனால்டி முறையில் வீழ்த்திய இத்தாலி அணி நான்காவது தடவையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

லண்டன் விம்ப்ளி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பலம் மிக்க இரு அணிகளான இத்தாலி மற்றும் ஸ்பெய்ன் ஆகிய அணிகள் மோதின. போட்டியின் முதல்பாதி முடிவில் இரு அணிகளினாலும் கோல்களைப் பெற முடியவில்லை. இரண்டாம் பாதி ஆரம்பமாகி போட்டியின் 60வது நிமிடத்தில் இத்தாலிய வீரர் பெடரிகோ சீஸா முதல் கோலை அடித்தார்.

போட்டி விறுவிறுப்பாக சென்றுகொண்டிருந்த நிலையில் 80ஆவது நிமிடத்தில் ஸ்பெய்ன் வீரர் அல்வேரோ மொடாரா பதில் கோலினை அடித்து போட்டியை சமப்படுத்தினார். போட்டியின் 90 நிமிடங்கள் நிறைவு பெற்ற நிலையில் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையடைந்தது. மேலதிக 30 நிமிடங்களில் இரு அணிகளும் கோலினைப் பெறாத நிலையில் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக பெனால்டி முறை நடத்தப்பட்டது.

இதில் இத்தாலி 4-2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது தடவையாக யூரோ கிண்ண இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. கடந்த 1968ஆம் ஆண்டு சம்பியனான இத்தாலி, 2000 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருந்தது. இந்நிலையில் 8 வருடங்களின் பின்னர் மீண்டும் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.



# இறுதிப்போட்டியில் பிரேசில் – ஆர்ஜென்டினா பலப்பரீட்சை

## மூன்றாமிடத்திற்காக பெரு – கொலம்பியா மோதல்



தென்னமெரிக்க நாடுகள் பங்கேற்கின்ற கோபா அமெரிக்க கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டியில் பிரேசில் மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. பெரு அணியுடன் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறிய நிலையில், நேற்றுக் காலை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொலம்பிய அணியை பெனால்டி முறையில் வீழ்த்திய ஆர்ஜென்டின அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

அதனடிப்படையில் இலங்கை நேரப்படி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ள மாபெரும் இறுதிப் போட்டியில் பலம்பொருந்திய இரு அணிகளான பிரேசில் - ஆர்ஜென்டினா ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

பிரேசில் அணி 9 தடவைகள் கோபா அமெரிக்க சம்பியன் பட்டத்தை கைப்பற்றியதுடன், நடப்புச் சம்பியனாகவும் திகழ்கிறது. 14 தடவைகள் சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய ஆர்ஜென்டினா, 2016ஆம் ஆண்டின் பின்னர் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. எனவே, இந்த இரு அணிகளும் மிகவும் பலம் பொருந்திய அணிகளாகக் காணப்படும் நிலையில், எந்த அணி கிண்ணத்தை முத்தமிடும் என்பது தொடர்பான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.




இதேவேளை கோபா அமெரிக்க கால்பந்துத் தொடரின் மூன்றாமிடத்துக்கான வெற்றியாளர் யார் என்பதைத் தெரிவுசெய்வதற்கான போட்டியில் பெரு மற்றும் கொலம்பியா ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்தப் போட்டி சனிக்கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது.



# வடக்கிலிருந்து மூவர் தெரிவு

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அடுத்த 4 வருடங்களுக்கான புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் கடந்த வாரம் நடைபெற்றிருந்தது. இதில் கால்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவராக ஜஸ்வர் உமர் தெரிவான நிலையில், அவர் தலைமையில் நிர்வாக தேர்தலில் போட்டியிட்டவர்களில் மூவர் வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ஆர்னோல்ட் இமானுவேல் உப தலைவராகவும், வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் தி.வரதராஜன் நிர்வாக பிரதி பொதுச் செயலாளராகவும், வவுனியா கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எ.நாகராஜன் உதவிப் பொருளாளராகவும்

# அணித்தலைவரான ரஷீட் கான்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளுக்கான அணித்தலைவராக சுழல் பந்துவீச்சு சகலதுறை வீரரான ரஷீட் கான் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த மாதம் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் மூன்று போட்டிகளுக்குமான தலைமையில் அதிரடி மாற்றம் நிகழ்ந்திருந்தது. அணித் தலைவராக செயற்பட்டு வந்த அஸ்ஹர் அஃப்கான் அணித்தலைமையிலிருந்து நீக்கப்பட்டு, டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணியின் புதிய தலைவராக ஹஸ்மத்துல்லாஹ் ஷஹிடி நியமிக்கப்பட்டார்.

அந்த வேளையில் இருபதுக்கு 20 அணியின் தலைவர் நியமிக்கப்படாதிருந்தாலும், இருபதுக்கு 20 அணியின் உப தலைவராக சகலதுறை வீரர் ரஷீட் கான் நியமிக்கப்பட்டார். மேலும், விரைவில் இருபதுக்கு 20 அணியின் தலைவர் அறிவிக்கப்படுவாரென ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்திருந்த நிலையிலேயே, தற்போது இருபதுக்கு 20 அணியின் புதிய தலைவராக ரஷீட் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.



# ஒப்பந்த விவகாரம் முடிவுக்கு வந்தது:

## இந்திய தொடருக்கான இலங்கை குழாம் இன்று அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தத்தில், வீரர்கள் கையெழுத்திடுவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை நிலவி வந்த நிலையில் நேற்றைய தினம் அனைத்து வீரர்களும் புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கிரிக்கெட் சபையானது கடந்த மே மாதம் 24 ஆம் திகதி வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தத்தினை அறிவித்திருந்தது. எனினும், இதில் வீரர்களின் தரப்படுத்தலிலும், அவர்களின் சம்பளத்திலும் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டி வீரர்கள் அனைவரும் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், அனைத்து வீரர்களும் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு நேற்றுக் காலை 8 மணி வரை இறுதி கால அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில், அனைத்து வீரர்களும் அதில் கையொப்பமிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி வீரர்களுக்கான ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், அடுத்து நடைபெறவுள்ள இந்தியத் தொடருக்கான இலங்கை அணியின் குழாம் இன்று அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை - இந்திய அணிகளுக்கு



இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7